மாலைமணி

Anand

ஆசிரியர்:
பி.எஸ்.இளங்கோ

மாலைமணி
ஆசிரியர்: பி. எஸ். இளங்கோ

மணி 2 — 19-6-60 — ஒலி 33

ஆந்திரத்திலும் ஒரு கக்கன்!

ஆந்திரத்தின் முன்னாள் முதலமைச்சரும், இன்றைய அகில இந்திய காங்கிரஸ் கட்சியின் ராஷ்டிரபதியுமான திரு. சஞ்சீவி ரெட்டி கொஞ்ச காலமாக தன்னை மிஞ்சுவாரில்லை என்று பேசிக் கொண்டு வருகிறார்!

முதலமைச்சர் பதவியை விட்டு விட்டு, காங்கிரஸ் கட்சியின் தலைமை பீடத்தில் அமர்ந்த பின்பு, அவருக்கு ஏற்பட்டுள்ள பண்பே தனியானதாகி விட்டது! இது காந்திய அரசியல் வாதிகளுக்கே ஏற்படுகின்ற உரித்தான வியாதி போலும்!

திருவாளர் சஞ்சீவி ரெட்டிகாருக்கு உயர்ந்த பண்பும், சிறந்த குணமும், நல்ல பாசமுள்ள நாட்டுப்பற்றும், இனப்பற்றும், தன்மான உணர்ச்சியும், சுயமரியாதை உணர்வும் உண்டென்று மனதார நம்பி வந்தோம்! அது முற்றிலும் தவறு என்பதை அவரே நமக்கு உணர்த்தி, உணர்த்திச் சொல்லிக் கொண்டு வருகிறார்!

திருவாளர் சஞ்சீவி ரெட்டிகாருக்கு இத்தகைய கீழ்த்தரமான குணம், இத்தகைய அற்பத்தனமான எண்ணம் இருக்குமென்று நாம் கனவு கூட காணவில்லை! எந்த அரசியல் வாதிகளுக்கும் இது போன்ற அற்பத்தனமான நினைப்பு இருக்கவே கூடாது என்பதை தயவு செய்து அவர் உணரவேண்டும்!

எந்த அரசியல் வாதியும் தன்னைப்பற்றி பெருமையடித்துக் கொள்ள மாட்டான்—அது கூடவும் கூடாது! அப்படித் தன்னைத் தானே தம்பட்டம் அடித்துக் கொண்டு திரிபவனை அரசியல் வாதி என்று உலகமும் ஒப்புக் கொள்ளாது! இதை எல்லா அரசியல் வாதிகளும் உணர வேண்டும்!

மாற்றான் சப்பையாக இருந்தாலும், சோடையாக இருந்தாலும் அவனைப் பாராட்டிப் பேசுவது தான் அரசியல் நாகரீகமாகும்!

திருவாளர் சஞ்சீவி ரெட்டிகாரு நீண்டகால அரசியல் வாதி-படித்தவர், பண்புள்ளவர், பலபெரும் பதவிகளை வகித்தவர்! அவருக்கே அரசியல் புரியவில்லை என்றால் மற்றவர்களுக்கு எப்படி புரியும் என்று தான் நமக்குத் தெரியவில்லை!

திருவாளர் சஞ்சீவி ரெட்டிகாரு ஒரு கூட்டத்தில் பேசும் போது முன்னேற்றக் கழகத்தைப்பற்றி குறிப்பிட்டாராம்! அப்போது அந்த கட்சியின் தலைவர் பெயர் அவருக்குத் தெரியவில்லையாம்! பக்கத்திலிருந்த திருவாளர் அரியலூர் அழகேசனிடம் கேட்டுத் தெரிந்து கொண்டு பேசினாராம்!

"முன்னேற்றக் கழகத் தலைவரின் பெயரென்ன" என்று சஞ்சீவிரெட்டிகாரு கேட்டாராம், அதற்கு "அண்ணாதுரை" என்று அழகேசனார் பதில் சொன்னாராம்! இந்த பரிதாபத்திற்குரியவர்களை நினைத்தால் சிரித்து சிரித்து விலாதான் நோகும் போலிருக்கிறது!

திருவாளர் சஞ்சீவி ரெட்டிகாரு சீமையில் பிறந்து, வின்ஸ்டன் சர்சிலின் தோட்டத்தில் விளையாடி, பக்கிங்காம் அரண்மனையில் நுழைந்து, ராஜ பரம்பரையோடு கூடி வாழ்ந்து வருபவர் அல்ல!

பக்கத்திலே இருக்கிற ஆந்திரத்திலேதான் பிறந்தார் சென்னையிலே தான் நீண்ட காலம் வாழ்ந்தார், பல பெரும் பதவிகளையும் வகித்தார்! ஆனால் அவர் நினைப்பும், எண்ணமும் எங்கோ சீமையிலே பிறந்ததாகவே இருக்கிறது!

தென்னகத்தில் மிக சக்தி வாய்ந்த இயக்கம் திராவிட முன்னேற்றக் கழகம் தான்! மிகச் சிறந்த பேச்சாளர், மிகச் சிறந்த எழுத்தாளர் அறிஞர் அண்ணா தான்!

ஈடு இணையற்றவர், எவருக்கும், ஒப்பும், உயர்வும் சொல்ல முடியாத ஒரு பெரும் அரசியல், தத்துவ மேதை!

மக்களின் பாசத்திற்கு நேசமானவர்கள் இங்கே மூன்றே மூன்று தலைவர்கள்தான் உண்டு. அந்த மூன்று தலைவர்களிடத்தில் தான் பாசமிருக்கிறது, மக்களின் அன்பும் இருக்கிறது!

அந்த மூன்று தலைவர்களுக்குத்தான் சிறப்புப் பெயருண்டு. பெயரைச் சொல்லாமலேயே மக்கள் அவர்களை உணர்ந்து கொள்ளும் சக்தியும் உண்டு!

"காந்தியாரை, காந்தியார்" என்று சொல்லி அறிமுகம் செய்து வைக்கத் தேவையில்லை! "மகாத்மா" என்று சொன்னாலே போதும், மக்களெல்லாம் பரவசமடைவார்கள்!

அதேபோல் திராவிடர் கழகத் தலைவரை இராமசாமி என்று சொல்லி மக்களிடம் அறிமுகம் செய்யத் தேவை இல்லை! பெரியார் என்று சொன்னாலே புரியும்!

அதே போல் எங்கள் தலைவரை, அறிவுலக மேதையை அண்ணாதுரை என்று எவருக்கும் அறிமுகம் செய்யத் தேவை இல்லை! அண்ணா என்று சொன்னாலே போதும்—ஆயிரம், ஆயிரம் இளைஞர்கள் "எங்கள் தலைவர், எங்கள் தலைவர்" என்று பாச உணர்ச்சியோடு கூறுவார்கள்!

காந்தியாரை "மகாத்மா" என்று அழைப்பதும், இராமசாமியை, "பெரியார்" என்று அழைப்பதும் வெறும் சிறப்புப் பெயர் மட்டும் தான்—எங்கள் தலைவரை "அண்ணா" என்று அழைப்பது பாசத்தின் எல்லை என்பதை மட்டும் புரிந்து கொள்ள வேண்டும்!

தமிழகத்திலே எங்கு வேண்டுமானாலும் சென்று "அண்ணா" என்றால் யார் என்று கேளுங்கள்—அறிஞர் என்பார்களே தவிர, திராவிடமுன்னேற்றக் கழகத்தின் தலைவர் என்பார்களே தவிர—"எங்கள் அண்ணன் அண்ணாசாமி" என்று எவருமே சொல்ல மாட்டார்கள்!

ஆந்திரத்திலும் சரி, தமிழகத்திலும் சரி—சஞ்சீவி ரெட்டியைக் காட்டி—"இவர் யார்" என்று கேளுங்கள்—யாரோ ஒரு வியாபாரி என்று தான் பதில் சொல்லுவார்கள்!

இப்படி ஒரு பெரும் புகழ் படைத்தவரை, தமிழகம் முழுவதும், ஆயிரக்கணக்கான தம்பிமார்களைக் கொண்டவரை சஞ்சீவிரெட்டிகாருக்கு தெரியவில்லை என்றால் அவரைப்பற்றி, அவருடைய பொது ஞானத்தைப் பற்றி கொஞ்சம் சந்தேகப்படத்தான் வேண்டி இருக்கிறது!

ஒரு பெரும் சக்தி வாய்ந்த இயக்கத்தின் தலைவரை தெரிந்து கொள்ளாதவர் அரசியலுக்கு ஏற்றவரா? அகில இந்திய காங்கிரஸ் கட்சியின் தலைவர் பதவிக்குத் தகுதியுடையவரா? கொஞ்சம் சிந்தித்துப் பார்க்கவேண்டும்! இப்படிப்பட்டவர்களெல்லாம் அரசியல் வாதிகளாக வந்து, நாட்டையாளும் பொறுப்பை வகிப்பதால் தான் நாடும் இந்த சீர்கேட்டை அடைந்திருக்கிறது!

தமிழகத்தில் தான் பொது ஞானத்தைபபற்றிக் கவலைப்படாத ஒரு கக்கன் இருக்கிறார் என்று எண்ணி வந்தோம்! ஆனால் ஆந்திரத்திலும் ஒரு கக்கன் இருப்பதைக் கண்டு—"பரவாயில்லை, தமிழகம் எவ்வளவோ பரவாயில்லை" என்று மகிழ்ச்சியடைய செய்கிறது!

ஆனால், நம்முடைய அமைச்சர் கக்கன் அவர்களை விட சஞ்சீவி ரெட்டியார் கொஞ்சம் மதியூகத்தோடே நடந்து கொண்டிருக்கிறார்!

"ரஷ்ய நாட்டுக்குப் பிரதமர் ஐசன்ஹோவர், அமெரிக்க நாட்டை ஆள்பவர் ரூஸ்வெல்ட். காந்தியார் பிறந்தது பம்பாய், நெய்வேலித் திட்டம் அணைக்கட்டு கட்டுவது" என்று மதிப்பிற்குரிய அமைச்சர் கக்கன் சொன்னது போல—"திராவிட முன்னேற்றக் கழகத்தின் தலைவர் ஜெபமணி, அனந்தநாயகி, குழந்தையம்மாள்" என்று கூறாமல், பக்கத்திலிருந்த தமிழ் நாட்டு ராஷ்டிரபதி அழகேசனைக் கேட்டு, தெரிந்துக் கொண்டு சொன்னதைப் பற்றி ஓரளவு அவரைப் பாராட்டத் தான் வேண்டும்! அவருக்கு எங்கள் பாராட்டு—ஆசிரியலின் மானத்தைக் காப்பாற்றியதற்காக எங்கள் நன்றி!

அரசியலில் எத்தனையோ கருத்துவேற்றுமைகள் இருக்கும்! அதற்காக தவறான, கீழ்த்தரமான செயலில் இறங்குவது நல்லதல்ல!

சூரியனை குடையால் மறைத்து விட முடியாது! அப்படி நினைப்பது பகுத்தறிவுக்கு புறம்பானது, மனிதத் தன்மைக்கு ஏற்றதுமல்ல! அரசியல் வாதிகள் கட்டாயம் இதை உணர வேண்டும்!

கருணாநிதி தண்டவாளத்தில் படுக்கலாம்!

கண்ணதாசன் மந்திரி கார்களை மறியல் செய்யலாம்!

அன்பழகன் சட்டமன்றத்தில் கருப்புக் கொடி பிடிக்கலாம்!

போர்முறை எப்படி என்பதை குமாரபாளையம் முடிவு செய்யும்!

சம்பத் எழுப்பும் சிம்மக்குரல்!

மறைந்த மாவீரன் தூத்துக்குடி தங்கம், கொள்கைக்காகக் தன் இன்னுயிரையே பலியிட்ட கொள்கை வீரன் தோழர் கே. வி. கே, சாமி அவர்களின் பெயரால் சூளையில் இனிதே நடைபெற்று வரும் கே, வி. கே. சாமி நினைவு மன்றத்தின் சார்பில் 8–6–60ம் தேதி மாலை சூளை சாமிப்பிள்ளைத் தெருவில் ஒருமாபெரும் பொதுக் கூட்டம் நடைபெற்றது.

இக் கூட்டத்தின் நினைவாக சூளைப்பகுதியில், பல வரவேற்புத் தட்டிகளும், இருவண்ணக் கழகக் கொடிகளும், தோரணங்களும், மின் விளக்கு அலங்காரங்களும் அழகாக செய்யப்பட்டிருந்தன.

கூட்ட ஆரம்பத்தில் சூளை திரு. பி. ஆர், அங்கமுத்துக் குழுவினரின் நாதசுர விருந்து நடைபெற்றது!

மேற்படி குழுவினர் பாரதிதாசனின் பாடல்களை மிக அழகாக இசைத்தனர்!

"வெண்ணிலாவும், வானும் போல" என்ற பாடலை இசைத்து மக்களை மகிழ் வித்தனர். கூட்டத்திற்கு சென்னை மாநகராட்சி மன்ற உறுப்பினரும், அந்த வட்டத்தில் கொள்கையை நன்கு வளர்த்து வருபவருமான ரா. கிருஷ்ண மூர்த்தி தலைமைதாங்கினர்.

தலைவர் முகவுரையாகப் பேசும் போது, மாநகராட்சி மன்றத்தில் திராவிட முன்னேற்றக் கழகம் பதவியேற்ற பின் செய்த பணிகளையும், திர்ாவிட முன்னேற்றக் கழகம் நாட்டில் செய்து வரும் நற்பணிகளைப் பற்றியும் அதை மாற்ருர்கள் மேடைகளில் தாக்கி வருவதைப் பற்றியும் கூறி மாற்ருரின் தூற்றலுக்கு தக்கபதிலளித்தார்.

பின் தோழர் சேதுராசன் காங்கிரசின் பழைய வரலாறுகளையும், இன்றைய வரலாறுகளையும், மாநில அமைச்சர்களின் தன்மான மற்ற போக்கினையும், டில்லி ஏகாதிபத்திய வெறியர்களின் ஆதிக்க ,வெறித் தன்மையைப் பற்றியும், வெகு விரைவில் வரப் போகும் விடுதலைப் போராட்டத்தைப் பற்றியும் அதில் சழக வீரர்கள் ஆற்ற வேண்டிய கடமைகளைப் பற்றியும் அந்தப் போராட்டத்தில் கழக வீரர்கள் எத்தகைய தியாகத்தையும் செய்யத் தயாராக இருப்பதாகவும் மிகவும் ஆதாரங்களோடும், வீர உணர்ச்சியோடும் பேசினர்!

பின் திராவிட முன்னேற்றக் கழகத்தின் பெருந் தலைவர்களில் ஒருவரும், டில்லி மக்கள் சபையின் உறுப்பினருமான சொல்லின் செல்வர் ஈ. வெ. கி. சம்பத் அவர்கள் நீண்ட கை ஒலிகளுக்கிடையேபேசியதாவது:

அன்புள்ள தலைவர் அவர்களே! அருமை நண்பர்களே! பெரியோர்களே! தாய்மார்களே!

இந்தப் பகுதியில் நமது மறைந்த மாவீரன் சாமியின் பெயரால் நல்லமுறையில் பணியாற்றி வரும் இந்த நினைவு மன்றத்தார் இந்த மாபெரும் பொதுக் கூட்டத்தை ஏற்படுத்தி உங்களையெல்லாம் சந்திக்க வைத்து நானும் சில கருத்துக்களைக் கூற வாய்ப்பளித்தமைக்கு மிகவும் மகிழ்வதுடன் அதற்காக எனது உளங்கனிந்த நன்றியையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

ஒரு சில தினங்களுக்கு முன் இங்கு நமது நண்பர்கள் ஏற்பாடு செய்திருந்த கூட்டம் மழை பெய்ததன் காரணமாக அரைகுறையாகக் கலைந்து விட்டது. இன்று மீண்டும் இவ்வளவு திரளாகக் கூடியிருப்பது கண்டு நான் மிகவும் பெருமைப்படுகிறேன்.

இன்று நாம் மிகக் கடினமான—சிக்கலான நிலையில் கூடி யிருக்கிறோம்.

இந்தியத் துணைக் கண்டத்தில் அன்று ஆட்சியாளர்களின் மன நிலை வேறு; இன்றைய மன நிலை வேறு.

இன்று நீதி, நியாயம் நேர்மை இவைகளுக்கு இடமில்லை.

நியாயத்தைக் கூறுவதற்கோ, நேர்மையை எடுத்துரைப்பதற்கோ, மன எண்ணத்தை வெளியிடுவதற்கோ, இங்கு இடமில்லை!

இந்த மாநிலத்திலுள்ள அமைச்சர்களும்டில்லியிலுள்ள ஏகாதிபத்தியக்காரர்களும் காங்கிரஸ் தலைவர்களும்நம்மை டில்லியிலுள்ளோரின் எடுபிடிகளாக, தன்மானமற்றவர்களாக—சதையற்ற சக்கைகளாக—அடிமைகளாக கேவலமான நிலையில் மதித்து வருகிருர்கள்!

நியாயத்தையும், நேர்மையும் எடுத்துரைக்கும் நமக்கு இன்று டில்லி அரசினரும், மாநில அரசினரும் தடைகள் செய்து வருகிருர்கள், நம்மை அடக்கப் பார்க்கிருர்கள்.

ஆனல் அரசியலில் நமக்கு ஆட்சி செய்வோருக்கு நீதியையும், நேர்மையையும் கையாளச் செய்வதே முதல் வேலையாக இருக்கிறது.

இன்று டில்லியிலுள்ள அரசினரும், மாநில அரசினரும் ஆச்சரியப்படும்படியான மாற்றமடைந்திருக்கிருர்கள்.

நம்முடைய விடுதலை வேட்கையை, உணர்ச்சியை நாட்டுப்பற்றை அடக்க–ஒடுக்க–எதிர்க்க டில்லி அரசினர் முன் வந்து விட்டார்கள். அவர்கள் நம்முடைய விடுதலை எண்ணத்தை எப்படி அழிப்பதுஎன்றமனப்பான்மைக்கு வந்திருக்கிருர்கள். அதற்கு நமது மாநில அமைச்சர்கள் தாளம் போடவும், நடிக்கவும் செய்து வருகிருர்கள். நம்முடைய நாட்டின் மீதோ, நமது மக்களின் மீதோ நமது மாநில அமைச்சர்

(5ம் பக்கம் பார்க்க)

இங்கே தமிழில் பேசவில்லை என்றால் நேருவானாலும் துரத்தியடியுங்கள்!

வடநாட்டு லோகியா சோடா புட்டிகளை வீசினாராம்!

அந்தத் தனிமனிதனுக்கு இந்தத் தைரியம் எப்படி வந்தது?

எரிமலையாகிறார் சம்பத்!

சென்னை மைலாப்பூர் 83-வது வட்டம், உதய சூரியன் படிப்பகத்தின் சார்பில் ஒரு மாபெரும் பொதுக் கூட்டம் 11-6-60ம் நாள் மாலை படிப்பகத்தின் செயலாளர், தோழர் துரைராசன் தலைமையில் மிக சிறப்பாக நடைப்பெற்றது.

தலைவர் முன்னுரைக்குப் பின் தோழர்கள் பி. வி. ஆனந்தன், நகர மன்ற உறுப்பினர் கோவிந்தசாமி. நகரமன்ற உறுப்பினர் துளசிங்கம் படிப்பகத்தைச் சார்ந்த மதியழகன் முதலியோர் இன்றைய ஆட்சியாளரின் நிலைமைகளை, பற்றியும் காங்கிரசார் நம்மைத் தூற்றி வருவதைப் பற்றியும் மிக விளக்கமாகவும் விரிவாகவும் பேசினார்கள். நம் நாடு துணை ஆசிரியா முகவை ஆர். எஸ். பாண்டியன் அவர்கள் டில்லி அரசாங்கத்தின் எதேச்சாதிகார போக்கை பற்றியும். இந்தியைக் கட்டயமாக இங்கு புகுத்தி வடநாட்டு ஆதிக்கத்தை நிலைநிறுத்த காங்கிரசார் செய்து வரும் சூழ்ச்சிகளைப் பற்றியும் மிகத் தெளிவாக நீண்ட நேரம் பேசினார்.

அடுத்து நமது இயக்கத்தின் தலைவர்களில் ஒருவரும், பாராளுமன்ற உறுப்பினருமான ஈ. வி. கே. சம்பத் அவர்கள் பேசியது வருமாறு;—

அன்புள்ள தலைவர் அவர்களே, தோழர்களே, தாய்மார்களே!

நான் இந்தப் பகுதியில் வாழும் பொது மக்களைச் சந்தித்து சில அரிய கருத்துக்களை கூறும் வாய்ப்பு எனக்குக் கிடைத்தமைக்கு மகிழ்வதுடன், இந்த வாய்ப்பினை நல்கிய இம்மன்றத்தாரையும் பாராட்டுகிறேன்.

எனக்கு முன் பேசிய நண்பர்கள் இன்றைய அரசியல் நிலைமைகளைப் பற்றியும், அரசியலிலுள்ள நெருக்கடிகளைப் பற்றியும். உணர்ச்சியையும், உற்சாகமும் ததும்பப் பேசினார்கள்.

இன்று மக்களின் உள்ளங்களில் உணர்ச்சியும், உத்வேகமும், விடுதலை எண்ணமும் கொந்தளித்து நிற்கிறது.

உங்கள் உள்ளங்களில் உணர்ச்சி பிரதிபலித்து உங்கள் முகங்களில் ஆவேசக் குறிகள் காணப்படுவதைக் காண்கிறேன்.

நாட்டிலுள்ள எல்லா இயக்கங்களைவிட திராவிடமுன்னேற்றக் கழகம் ஒன்றுதான்மக்களின் உரிமைக்காகப் பாடுபடுகிறது. மக்கள் உரிமையோடு வாழ வேண்டுமென்று போராடி வருகிறது.

மற்ற இயக்கங்கள் தங்களுக்கு விடுதலை கிடைத்து விட்டது. இனி தங்களுக்குத் தேவையான வசதிகள் வாய்ப்புகள் கிடைக்க வேண்டுமென்று கேட்டு வருகிறது.

நாம் மக்களுக்கு உரிமையே இல்லை சுதந்திரத்துடன் அவர்கள் வாழவில்லை. அவர்கள் நிலை அடிமைத் தன்மையில் இருக்கிறது. என்று கூறி வருகிறோம், அவர்கள் நம்திக்கில் தங்கள் கண்ணோட்டத்தைச் செலுத்தவே மறுக்கிறார்கள்.

மற்ற கட்சிகளுக்கும் நமக்கும் அடிப்படையிலேயே கருத்து வேறுபாடுகள் இருந்து வருகிறது.

எனக்கு முன் பேசிய தோழர் பாண்டியன் இந்தியைப் பற்றி உங்களிடன் பேசினார்.

திராவிட முன்னேற்றக்கழகம் ஒரு பெரிய உரிமைப் போரை நடத்த வேண்டிய கட்டத்திற்கு வந்து விட்டது.

அதுதான் இந்தி எதிர்ப்புப் போர்!

நாம் இந்தியை வெகு நாகரீகமுடனும், பொறுமையுடனும், பொறுப்புடனும் எதிர்த்தோம். இந்தியைப் பற்றிய நமது எண்ணத்தையும் கருத்தையும் நல்ல முறையில் எடுத்துரைத்திருக்கிறோம். சொல்லியிருக்கிறோம். "இந்தி" "சனியன்" எங்களுக்கு வேண்டாம். அதை எங்கள் மீது சுமத்த வேண்டாம் என்று பல முறை கூறியிருக்கிறோம். இந்தி என்பது எங்களுக்கு பேரிழிவைத் தருவது. அப்படி இழிவைத் தரும் அந்த மொழியை நாங்கள் ஏற்க மாட்டோம் என்று கூறியிருக்கிறோம்.

நாம் இந்தியை திடீரென்று இன்று தான் எதிர்க்கிறோம். என்று யாரும் நினைக்க வேண்டாம். இதைபல ஆண்டுகளாகவே எதிர்த்து வருகிறோம்.

நாம் பல முக்கிய நோக்கங்களைக் கொண்டு, முக்கிய பிரச்சினைகளுக்காக மாநாடுகளைக் கூட்டினாலும் அங்கும் இந்தியை எதிர்த்துப் பேசி வந்திருக்கிறோம். தீர்மானம் நிறைவேற்றி வந்திருக்கிறோம்.

எனக்கு முன் பேசிய நண்பர்கள் டாக்டர் லோகியாவைப் பற்றிப் பேசினார்கள். நான் டாகடர் லோகியாவிடம் தனிப்பட்ட முறையில் மதிக்கிறேன், அவருக்கு மதப்புக் கொடுக்கிறேன். அவரிடம் எனக்கு எப்போதும் அன்பு உண்டு.

ஆனால் அவர் இங்குள்ள மக்கள் மீது இந்தி ஏகாதிபத்தியத்தை—இந்தியை பலவந்தமாக வெறிச் செயலுடன் புகுத்த முறபடுவதை— அவருக்கிருக்கும் அளவற்ற இந்தி வெறியை இந்த நாட்டில் திணிக்க முற்படுவதைப் பார்க்கும்போது அவர் மீது எனக்கு அளவற்ற கோபமும், வெறுப்பும் ஏற்படுகிறது.

மக்கள் விரும்பாத ஒன்றை—மக்கள் வெறுக்கின்ற ஒன்றை பிடிவாதமாக மக்கள் மீது திணிக்க டாக்டர் ராம் மனோகர் லோகியா நினைக்கிறார். இந்தக் காட்டு மிராண்டிதனத்தை—அவரது காட்டுக் குணத்தைப் பார்க்கும் போது எனக்கு அவர் மீது அளவற்ற வெறுப்பு ஏற்படுகிறது.

டாக்டர் லோகியா தமிழ் நாட்டிற்கு வந்து நாகரீகமற்ற முறையிலும் வெறிபிடித்த தன்மையிலும் நடந்து கொள்கிறார்.

கோவையிலிருந்து நமது அருமை நண்பர் ராஜமாணிக்கம் இங்கு வந்திருந்தார். அவர் கோவையில் நடந்த நிகழ்ச்சிகளைப் பொதுச் செயலாளரிடமும், தலைமை நிலையத்திலும் அவர் கூறிய போது திடுக்கிட்டேன்.

கோவையில் டாக்டர் லோகியா இந்தியில் பேசியதை எதிர்த்து — பேசியதைத் தடுத்த பொது மக்கள் மீது சோடா பாட்டிலை வீசி எறிந்திருக்கிறார் எப்படி அவருக்கு இந்த தைரியம் வந்தது வடநாட்டிலிருந்து தென்னகத்திற்கு வந்திருக்கும் ஒரு தனி மனிதனுக்கு இவ்வளவு வீரமும் துணிச்சலும் எப்படி வந்தது.

தமிழ் நாட்டிற்கு வந்து தமிழர்களை அவமதித்து தனது வெறிச் செயலை, காட்டு குணத்தை காட்டும்படியான நிலை உத்திரப் பிரதேசத்தை சார்ந்த ஒரு வடநாட்டாருக்கு ஏற்பட்டிருக்கிற தென்றால் நாம் நம்மைப் பற்றி என்ன நினைப்பது

நாம் முன்பிருந்தே நமது எதிர்ப்புகளை செய்கைகளில் காட்டி யிருந்தால், அவர்களை எதிர்த்திருந்தால் இந்த தைரியம் அவர்களுக்கு வந்திருக்காது.

ஓராண்டுக்கு முன் இதே லோகியா கோக்கலே மண்டபத்தில் பேசும் போது "ஆங்கிலத்தில் பேசு" என்று கூச்சலிட்டதாக எனக்கு முன் பேசியவர்கள் கூறினார்கள் அது தான் தப்பு.

அன்று நாம் அவரிடம் "ஆங்கிலத்தில் பேசு என்று கூறாது தமிழில் பேசு" என்று கூறியிருந்தால் இன்று அவர் இந்த வெறித் தன்மைக்கு வந்திருக்க மாட்டார். தமிழ் தெரியாது என்றால் இங்கு உனக்கு வேலையில்லை போ" என்று துரத்தியிருக்க வேண்டும்.

தமிழ்நாட்டில் தமிழில் பேசாதவர்கள் பேச்சை கேட்க மாட்

(9ம் பக்கம் பார்க்க)

மக்களைக் காப்பாற்ற வேண்டிய போலீஸ் இலாக்கா காங்கிரஸ் சபையாகிவிட்டது!

மந்திரிகளின் தயவுக்காக மக்களை அவமதிப்பதா ?

(சம்பத் பேச்சு)

(3-ம் பக்கத் தொடர்ச்சி)

களுக்கு அக்கரையோ, துளி கவலையோ கிடையாது!

நமது மக்கள் எண்ணத்தையும், அவர்கள் உணர்ச்சியையும் புரியாதவர்கள் போல் நமது மாநில அமைச்சர்களும், டில்லி அதிகார வெறியர்களும் நடந்து கொள்கிறார்கள்!

அவர்கள் புரிந்து கொள்ளும்படியும், அறிந்து கொள்ளும்படியும் நாம் செய்யவேண்டும் செய்யும் காரியங்கள் அவர்கள் சூடுபடும்படி செய்தால் தான் அவர்களுக்குப் புரியும்.

டில்லி அரசினரும் மாநில அரசினரும் கூடிப் பேசியே நம்மை அழித்துவிட, அடக்கிவிட சதித் திட்டம் போட்டு வேலை செய்கிறார்கள்!

நம்முடைய குரல்கள் எப்படி ஒலித்தாலும் அதை மதிக்க மாட்டோம். நாங்கள் சொல்வதை நீங்கள் கேட்டுத் தான் ஆகவேண்டும். நீங்கள் எங்கள் அடிமைகள் என்று எண்ணியேயே இன்று நம்மை அடக்க ஆரம்பித்து விட்டார்கள்!

முன்பெல்லாம் நம்முடைய எதிர்ப்பை மதிப்பவர்கள் போல் இருந்த சென்னை அமைச்சர்களும், டில்லி அரசினரும் இன்று நம்மை எதிர்க்கும் நிலைக்கும் வந்து விட்டார்கள் இனி அவர்களிடம் நியாயத்தையோ, நேர்மையையோ எதிர்பார்க்க முடியாது!

நமது மாநில முதலமைச்சர் காமராசர் தஞ்சை மாவட்டத்தில் சுற்றுப் பிரயாணம் செய்தார்! அந்த மாவட்டத்தில் நானும் சுற்றுப் பிரயாணம் செய்தேன் அங்கு இருவருக்கும் மோதல் ஏற்பட்டது.

முதல் அமைச்சர் காமராசர் திராவிட முன்னேற்றக் கழகத்தை அங்கு கடுமையாகத் தாக்கிப் பேசியிருக்கிறார். பத்திரிகைகளில் அவைகள் சரிவர வெளிவரவில்லை. அதைப் பற்றி இங்கு கூறுவது கடமை யென்ற முறையில் சிலவற்றைச் சொல்ல ஆசைப்படுகிறேன்,

நாம திராவிடர் கழகத்திலிருந்து பிரிந்து வந்து நமது கழகத்தை ஆரம்பித்து பணியாற்றி வரும்போது நம்மை கேலியும், கிண்டலும் செய்தவர்களுக்கு காங்கிரசை எதிர்ப்பதற்கு திராவிடர் கழகமும் முன்னேற்றக் கழகமும் இரட்டைக் குழாய் துப்பாக்கி என்றோம்! இதைநமது அண்ணா அவர்கள் தான் உவமைக்காகச் சொன்னார்,

காங்கிரசை அன்று திராவிடர் கழகம் தீவிரமாக எதிர்த்து வந்தது. திராவிட முன்னேற்றக் கழகத்தாரகிய நாமும் எதிர்த்து வந்தோம் அதை வைத்து அன்று "இரட்டைக் குழாய் துப்பாக்கி" என்றோம்!

இதை வைத்து காமராசர் கேலி பேசுகிறார் "ஒரு குழாய் துப்பாக்கி தான் இருக்கிறது என்கிறார். இந்த ஒரு குழாயை வைத்து எங்களை ஒன்றும் செய்ய முடியாதென்றார் தம்மிடம் பல துப்பாக்கிகள் இருப்பதாக போலீசையும், அதிகாரத்தையும் காட்டி பயமுறுத்துகிறார் மிரட்டுகிறார் ரிசர்வ் படையைக் காட்டி அச்சுறுத்துகிறார்.

அவர் மனதில் உள்ளதை தெளிவுபட வெளியில் எடுத்துரைத்து விட்டார்.

அமைச்சர்கள் எப்பொழுதும் நாவடக்கமாகப் பேச வேண்டும். அமைதியை நிலை நாட்டும் வகையில் அவர்கள் பேச்சுக்கள் இருக்க வேண்டும்.

அதை விடுத்து காமராசர் துப்பாக்கியையும் ராணுவத்தையும் போலீசையும் காட்டி மிரட்டினால் அதனால் நாம் துவண்டு விட மாட்டோம், அஞ்சி விட மாட்டோம்.

திராவிட முன்னேற்றக் கழகம் ராணுவத்தையும் போலீசையும் துப்பாக்கியையும் கண்டு என்றும் அஞ்சியதில்லை அஞ்சப்போவதில்லை,

ராணுவத்தை நம்பி மக்களை மதிக்காதவர்களைப் பற்றியும், துப்பாக்கியையும் போலீசையும் கொண்டு மக்கள் உணர்ச்சியை அடக்கியவர்களின் வரலாறுகளைப் பற்றியும் திராவிட முன்னேற்றக் கழகம் நன்கு அறிந்திருக்கிறது. அந்த வரலாறுகளை திராவிட முன்னேற்றக் கழகத்திலுள்ளோர் நன்கு படித்திருக்கிறார்கள்.

அமைச்சர் காமராசருக்கு இந்த வரலாறுகளை அறிந்து கொள்ளும் சந்தர்ப்பம் இல்லாததால் நம்மை துப்பாக்கியைக் காட்டி அச்சுறுத்துகிறார்.

பிரஞ்சு நாட்டு வரலாறு, அந்த நாட்டு மன்னன் லூயியினுடைய செய்கைகள் அவன் மக்களிடம் நடந்து கொண்ட விதம் அங்கு ஏற்பட்ட நிலைகள் இவைகளைப் பற்றி காமராசருக்குத் தெரியாது!

மக்களின் விடுதலை வேட்கையை ஏளனம்செய்தான் லூயி மன்னன், அவர்கள் உணர்ச்சியைக் கேவலப்படுத்தினான். மக்கள் தங்கள் உரிமைகளைக் கேட்டால் சுட்டுத்தள்ளினான், படைகளைக் கொண்டு விரட்டியடித்தான் தினமும் துப்பாக்கி வேடிகளால் மக்களை சுட்டு வீழ்த்திக் கொண்டிருந்தான்.

அதன் பயனாக அங்கு புரட்சி வெடித்தது. மக்களை மிருகம் போல் சுட்டு வீழ்த்தி பலியிட்டு வந்த மன்னனை மக்கள் தேடினார்கள், "எங்கே மன்னன், எங்கே மன்னன்" என்று மக்கள் தேடினர் பின் மன்னன் நிலை என்னவாகியது மக்களை அடக்கிய ஆட்சி என்ன கதியை அடைந்தது என்ற வரலாறுகளை—நிகழ்ச்சிகளை அறியாதவர் போல் காமராசர் பேசி வருகிறார்.

அவர் திராவிட முன்னேற்றக் கழகத்தைக் கிள்ளுக் கீரை என்று எண்ணிக் கொண்டு பேசி வருகிறார். மக்களை அவர் மதிக்காத முறையில் பேசி வருகிறார்.

எனக்கு முன் பேசிய நண்பர்கள் கூறினார்கள், அமைச்சர்கள் முதல், காங்கிரஸ் தலைவர்களும் சட்ட மன்ற உறுப்பினர்களும் நம் கழகத்தையும் நம்மையும் மிகக் கேவலமாகவும் இழிவாகவும் தரங்கெட்ட முறையில் தாக்கி வருவதாகவும் கூறினார்கள்.

இது கூடிப் பேசியே இப்படிப் பேசி வருகிறார்கள், டில்லி சர்க்காருடனும், நேருவுடனும் கலந்து பேசியே காலித்தனமாகவும் ஒழுங்கற்ற முறையிலும் பேசி வருகிறார்கள்.

இது மதுராந்தகத்திலோ, திருக்கழுக் குன்றத்திலோ மட்டும் பேசுவதல்ல. கன்னியாகுமரியிலிருந்து, தென்னகம் முழுதும் எல்லா மாவட்டங்களிலும் ஒன்று போல் சட்டமன்ற உறுப்பினர்களிலிருந்து சாதாரண தொண்டர்கள் வரை ஏசியும் தூற்றியும் பேசிவருகிறார்கள். டில்லியிலுள்ள ஆட்சியாளர்களுக்கு இங்குள்ள அமைச்சர்கள் தைரியம் கொடுக்கிறார்கள் "முன்னேற்றக் கழகத்தாரை நாங்கள் பார்த்துக் கொள்கிறோம்" என்று கூறியிருக்கிறார்கள். அந்த முறையில்தான் இன்று நமது மாநில அமைச்சர்கள் நம்மைத் தாக்கவும், இழித்துப் பேசவும், அழித்துவிடவும் திட்டமிட்டு வருகிறார்கள்.

மக்களிடத்தில் ஏற்பட்டுள்ள விடுதலையை, சுதந்திர உணர்ச்சியை அதிகாரத்தால்—அதிகார பலத்தால், அதிகாரிகளின் துணையால் ஒழித்து விடலாம் என்று நினைத்து வருகிறார்கள்,

நமது நண்பர் ஒருவர் கூறினார் காமராசருக்கும், காங்கிரஸ்காரர்களுக்கும் ஏப்ரல் மே மாத வெய்யிலால் தலையில் சூடு அதிகமாகி பிதற்றி வருவதாக. அது மாத்திரமல்ல, டில்லியிலுள்ள தங்களது மூலவர்களிடம் ஒப்பந்தம் செய்து கொண்டு, அவர்களிடம் கலந்து பேசிக் கொண்டே இன்று அடக்கு முறையாலும், அணுவப் பேச்சாலும் ஒழித்து விடலாம் எனக்கனவு காண்கிறார்கள்.

நாட்டு மக்களின் நலனுக்காகவும், பொது மக்களுடைய பாதுகாப்புக்காகவும் இருக்கின்ற அதிகாரிகளும், போலீஸ் இலாகாவும் இன்று காங்கிரஸ் பிரச்சார இயந்திரங்களாக மாறியிருக்கிறார்கள். காங்கிரஸ்காரர்களும் அவர்கள் துணை கொண்டு அழித்து விட எண்ணுகிறார்கள் பொது இயக்கங்களை எப்படி அடக்குவது, பொது மக்கள் உணர்ச்சிகளை எந்த வகையில் அழிப்பது என்று திட்டமிட்டு வேலை செய்கிறார்கள்!

நான் தென்னகமெங்கும் சுற்றி வந்ததில் நான் நன்றாகத் தெரிந்து கொண்டேன் பொது மக்களின் பாதுகாப்பிற்காக இருக்கும் போலீஸ் அதிகாரிகள் காங்கிரஸ் தலைவர்களாகமாறி விட்டார்கள்.

(8ம் பக்கம் பார்க்க)

இந்தியா

யார் வீட்டு சொத்து?

ஏன் பிரிக்கக் கூடாது!

வடநாட்டு அசோக் மேத்தா "இந்தியாவைப் பிரிக்க விட மாட்டேன்" என்று வாய் சவடால் காட்டியிருக்கிறார்!

இந்தியா யார் அப்பன் வீட்டு சொத்து? இவர் யார் பிரிவினையைத் தடுக்க! இவருக்கு மட்டும் எங்கிருந்து வந்தது அந்த உரிமை?

வடவர்களுக்கு மட்டும் பட்டா சாசனம் செய்யப்பட்டு விட்டதா?

பிரிவது உறுதி—இல்லாவிட்டால் பிரிப்பது உறுதி! அசோக்மேத்தா தடுக்கட்டும், தடுத்துப் பார்க்கட்டும்!

தேர்தல்புரி யாத்திரை

பி.எஸ்.இளங்கோ

9

வந்தேமாதரம்!

ஜெய்ஹிந்த்!

இரவு மணி பத்தாயேயும் சாந்தாவின் தேம்பல் மட்டும் நீங்கவில்லை! படுத்த படுக்கையாகவே கிடந்தாள்! என்ன இருந்தாலும் பெற்ற மனசுகேட்குமா? தனசேகரம் பிள்ளை ஒருவாறு கோபத்தையெல்லாம் தணியவைத்துக் கொண்டு சாந்தாவின் படுக்கையறைக்குள் நுழைந்தார்!

"இப்ப என்னமா நடந்துவிட்டுது—ஏன் இப்படி சதா கண்ணீரும், கம்பலையுமாகவே இருக்கே" தனசேகரம் பிள்ளை மகளுக்குப் பக்கத்தில் உட்கார்ந்து கொண்டு இப்படி கெஞ்சாத குறையா கேட்டார்!

"ஒன்றுமில்லையப்பா!" என்று கூறிக் கொண்டே முகத்தை படுக்கையில் புதைத்துக் கொண்டு அழ ஆரம்பித்தாள்!

"என்னைப் பாரம்மா! கொஞ்சம் முகத்தைக் காட்டம்மா!" தனசேகரம் பிள்ளை இப்படி கெஞ்சினர்!

"அப்பா! தயவு செய்து என்னை தொந்தரவு செய்யாதீர்கள்" சாந்தா தன் உள்ளம் சரியில்லை என்பதை எடுத்துக் காட்டிக கொண்டாள்!

"அதெப்படியம்மா சும்மா இருக்க முடியும்! பிள்ளை மனசு கல்லு, பெத்த மனசுதாம்மா பித்து" தனசேகரம் பிள்ளைக்கும் பெற்ற பாசம் இருக்கத் தான் செய்தது!

"அப்பா! படித்து, பட்டம் பெற்று விட்டு இப்படி சும்மா எத்தனை நாளைக்கு உட்கார்ந்தே இருக்க முடியும்!" சாந்தா ஏனோ உள்ளத்தில் உள்ளதை இப்படி மறைத்துப் பேசுகிருள்! தந்தையிடம் அவள் எப்படித் தான் அதைச் சொல்ல முடியும்!

"பின்ன, என்ன செய்யணும்" தனசேகரம் பிள்ளை சாந்தாவின் பதிலை ஆவலோடு எதிர் பார்த்துக் கொண்டிருந்தார்!

"என்ன செய்யணுமா? இந்த பட்டிக் காட்டிலேயே முடங்கிக் கிடக்கச் சொல்லுறீங்களா? படிச்சப் படிப்பை பாழாக்கச் சொல்லுறீங்களா?" சாந்தா கொஞ்சம் கோபமாகவே பேசி விட்டாள்!

"அப்படியெல்லாம் சொல்லலே அம்மா! நீ சுகமா, சந்தோஷமா வாழணும்!" தனசேகரம் பிள்ளையின் கண்களில் நீர் துளிர்த்திருந்தன!

"இந்த பட்டிக் காட்டில் இருந்தா சுகமா இருக்க முடியுமா? நான் எங்காவதுபோய் வேலை பார்க்க வேண்டும்! கொஞ்ச நாளைக்காவது தனியாக இருக்க வேண்டும்" சாந்த இந்த உலகத்தையே வெறுத்து விட்டது போல் பேசினாள்!

"நீ, எம்மா வேலை பார்க்கணும்! கடவுள் கொடுத்த சொத்து இருக்கு அதை வைச்சு கிட்டு எவ்வளவோ சந்தோஷமா காலத்தைக் கழிக்கலாமே யம்மா!" தனசேகரம் பிள்ளை ஆறுதல் வார்த்தை கூறினர்!

"சொத்து இருந்தா போதுமா அப்பா! வாழ்க்கையில் நிம்மதி வேண்டாமா!" சாந்தா பாட்டி போல் பேச ஆரம்பித்தாள்!

"உனக்கென்னம்மா இங்கே நிம்மதி குறைவு! எனக்குத் தான் நிம்மதி இல்லை! உன்னை ஒரு பெரிய இடத்தில் கல்யாணம் செய்து கொடுககிற வரையில என் கவலை தீரவே தீராது!' தனசேகரம் பிள்ளை தன் எண்ணத்தை சுருக்கமாகச் சொன்னர்.

"எனக்கேனப்பா திருமணம்! எனக்கு வேண்டியது வேலை தான்!" சாந்தாவின் முகத்தில் கொஞ்சம், கொஞ்சமாக புன்னகையும் மலர ஆரம்பித்தது!

"ஏன் திருமணமா? நல்ல பெண்ணம்மா நீ! இந்த காலத்தில் பிறந்திருசகக் கூடாது!"

"ஏனப்பா அப்படி சொல்லுறீங்க?" சாந்தா ஒன்றும் அறியாதவளைப் போல் இப்படி கேட்டாள்!

"இந்த காலத்துப் பெண்கள், அதுவும் பட்டணத்தில் படிதத பெணகள், அதுவும் மெடிகல் காலேஜில் படிதத பெண்கள் இப்படி யாரும் இருக்க மாட்டாங்க! நீ ஒருத்தி தான் தப்பிப் பிறந்தவள்" தனசேகரம் பிள்ளைக்கு தன் மகள் மீது எத்தனை நம்பிக்கை!

"தாயைப் போல பிள்ளை, நூலைப் போல சேலை!" சாந்தா பழமொழி பேச ஆரம்பித்தாள்!

"இல்லையம்மா! தறியிலும் இருககு!"

"அப்படின்னு?"

"வளர்க்கிற முறையிலும் இருக்குன்னு சொன்னேன்"

"ஆமாம் அப்பா! உங்களைப் போலத் தானே நானும் இருப்பேன்!"

"அதிலே சந்தேகம் என்ன கண்ணு!" தனசேகரம் பிள்ளைக்கு தன்னைப் பற்றி பெருமை பேசினல் ஒரு அலாதியான மகிழ்ச்சி தான் ஏற்படும்!

"அதிருக்கட்டும் அப்பா! எனக்கு எங்காவது வேலை".

"எம்மா உனக்கு வேலை! நமக்கு என்ன குறைச்சல்! வேலை பார்த்து தானு சாட்பிட வேண்டும்!"

"இல்லையப்பா! பொழுதே போகலே!"

"அதுக்கு வேலை தானு செய்யணும்! பொழுது போறத்துக்கு எத்தனையோ வழி இருக்கு!"

"என்னப்பா வழி இருக்கு?"

"வேலை செய்வதைவிட சமூக சேவை செய்தால் எத்தனையோ புண்ணியமுண்டு! அதோடு புகழும் உண்டு! பின்னல் இந்த நாட்டைக் கூட நீ ஆண்டு விடலாம்!" தனசேகரம் பிள்ளைக்கு காரியம் தானே பெரிது!

"என்னப்பா உளறுறீங்க!" சாந்தா கேலியோடு கேட்டாள்!

"நான் ஒண்ணும் பைத்தியக்காரனில்லையப்மா! உத்தியோகத்தில் கிடைக்கிற வருமானம், புகழ், பெருமைகளைக் காட்டிலும் அரசியலில் தானம்மா சுலபமா கிடைக்கும்!" தனசேகரம் பிள்ளை தன் வழிக்கு மகளையும் இழுக்க ஆரம்பித்தார்!

"சரிதானப்பா! உங்க விருப்பம் எதுவோ அதுதானப்பா என் விருப்பமும்!" சாந்தாவுக்கு தான் எத்தனை பாசம், தன் தந்தை மீது!

"சரிதானம்மா! நாளைக்கே அதற்கான ஏற்பாடுகளை கவனிக்கிறேன்" என்று கூறிக் கொண்டே தனசேகரம் பிள்ளை மனதுக்குள் சிரித்துக் கொண்டார்!

சமூக சேவை! இதனுல் எத்தனை குடும்பங்கள் பெரும் கௌரவத்தைப் பெற்றிருக்கின்றன! எத்தனைக் குடும்பங்களுக்குப் பதவி கிடைத்திருக்கின்றன! சாந்தா சமூக சேவகியானுல் நான் நிச்சயமாக மந்திரிதான்!

படித்துப், பட்டம் பெற்றவளையா சமூக வேலையில் ஈடுபடுத்துவது! அவளுடைய வாழ்க்கை, அவளுடைய அந்தஸ்து! வாழ்க்கையாவது, அந்தஸ்தாவது! எல்லாம் பதவியில் தான் இருக்கிறது, எல்லாம் பணத்தில் தான் இருக்கிறது! தேர்தலிலே ஜெயிக்க வேண்டுமென்றுல் எதை எதையோத் தான் செய்ய வேண்டும்! உழைத்து போனுல் தான் வாழ்வு கிடைக்கும்! சத்தியம், தர்மம், அகிம்சை என்று போதித்தவர்கள் யாரும் இதுவரை வாழ்ந்ததாகச் சரித்திரம் கூறவே இல்லை! நமக்கேன் அந்த அழிவுப் பாதை! அது காந்தியாரோடே போகட்டும்! நமக்கு வேண்டியது அந்த உத்தமரின் உழைப்பு, அந்த உழைப்பால் கிடைத்த லாபம்!"

"அது துரோகமல்லவா? யார் சொன்னது துரோகமென்று! அப்படியென்றுல் நான் மட்டுமா துரோகி?" தனசேகரம்பிள்ளை தனக்குத்தானே இப்படிப் பேசிக் கொண்டு ஒரு முடிவுக்கு வந்தவர் போல் திடீரென்று எழுந்தார்! சுவற்றில் மாட்டியிருந்த காந்தியாரின் படத்தைத் தொட்டு ஒருமுறை கும்பிட்டு விட்டு—"என்னமோ உன்னை நம்பி தான் இந்த காரியத்தில் இறங்குகிறேன், நீ தான் என்னைக் காப்பாற்ற வேண்டும்—வந்தேமாதரம், ஜெய்ஹிந்த்" என்று கூறியபடியே வெளியே புறப்பட்டார்!

—வளரும்

இந்தியை அழித்து, அழித்துப் பார்த்தோம்! அவர்களோ மீண்டும், மீண்டும் எழுதுகிறார்கள்! இனி அழிப்பதா? நிர்மூலமாக்குவதா?

(சம்பத் பேச்சு)

(12ம் பக்கத் தொடர்ச்சி)

நமது தோழர்களின் பேச்சுகளைப் பார்த்தால் யாரும் சோடையில்லை, சொத்தையில்லை என்பதைக் காட்டி வருகிறார்கள்.

நமது கழகம் ஆரம்பிக்கப்பட்டதே போராட்ட மனப்பான்மையில் தான்! கழகத்தின் போராட்ட குணம் இன்னும் மாறவில்லை. திராவிட முன்னேற்றக் கழகம் தன்னுடைய போர் உடையை இன்னும் மாற்றவில்லை, ஆரம்பிக்கப்பட்ட போது, அதன் கருத்து எப்படி இருந்ததோ அப்படியே இருந்து வருகிறது. முன்னேற்றக் கழகத்தின் நோக்கம் இன்னும் நிறைவேறவில்லை. அந்த நாள் நெருங்கிக் கொண்டே வருகிறது. அதன் படைகளும் அதை எதிர்நோக்கி நிற்கிறது.

திராவிட முன்னேற்றக்கழகம் சட்ட சபைக்கும், பாராளுமன்றத்திற்கும் செல்லும் ஒரு ஸ்தாபனம் என்று பலர் நினைக்கிறார்கள், அமைச்சர்களும் எண்ணுகிறார்கள் இது மிகத்தவறு. அங்குச் செல்வது அதன் நோக்கங்களில் ஒன்றேயல்லாது அதுவே தான் அதன் லட்சியமாகாது.

நாம் வடவர்கள் எண்ணம் போல் நடப்பவர்கள் என்று நினைத்துக் கொண்டுதான் அவர்கள் நடக்கிறார்கள்.

பண்டித நேரு எப்பொழுது சென்னைக்கு வந்தாலும் ஐலண்டு மைதானத்தில் பேசினாலும் ஆங்கிலத்தில் பேசுவதா? இந்தியில் பேசுவதா என்று கேட்டே பேசுகிறார், அப்படி கேட்பதே அவமானம் நாம் இந்தியை எதிர்த்து வருகிறோம் என்றும் தெரிந்தே கேட்கிறார். நாம் தைரியமாக முன்பே "இந்தியில் பேசாதே" என்று கூறியிருந்தால் அவர் அவ்வாறு கேட்பாரா? அவர் மிகப் பெரிய மனிதர் என்று நினைத்து சும்மா இருந்து விடக்கூடாது.

அவரிடம் திட்ட வட்டமாக 'தமிழில பேசினால் பேசு' இன்றேல் போய்விடு என்று கூறி விட வேண்டும். இதில் தயவு. தாட்சண்யம், வளைவு, குழைவு எண்ணங்கள் இருக்கக் கூடாது.

இன்று உலகம் சுற்றியுள்ள நிலைமைகளைப் பார்க்கிறோம் அங்கு நிகழ்வதையும் காண்கிறோம். அங்கு அவர்கள் தங்கள் விடுதலைககாகப் போராடி வருவதையும் கண்டு வருகிறோம்.

ஜனநாயக உரிமைகளையும், உயிருக்கு மேலான உரிமைகளையும் பெற்று இன்பமுடனிருக்கும் நாடுகள் கூட இன்று போர் முழக்கம் செய்து வருகிறது.

சோவியத் எல்லையில் அமெரிக்க வேவு விமானம் பறநதது என்பதற்காக அங்கு என்ன நிலையடைந்தது.

அவர்களுடைய பேச்சுக்கள் எல்லாம் எப்படி இருந்தது.

சோவியத் ராணுவ அமைச்சர், வேவு விமானததை அனுப்பியவர்களுடையவும், அதற்கு உடந்தையாக இருந்தவர்களுடையவும் தலைகளைக் கிள்ளி எறிவேன் என்று முழக்கமிட்டார்,

சோவியத் முதலமைச்சர் குருசேவ் இனி விமானம் வந்தால் சுட்டு வீழ்த்துவோம். அவர்கள் வாலை ஒட்ட அறுப்போம். அதற்கு ஆதரவு தரும் நாடுகளையும் அடக்குவோம் என்று பயமுறுத்தி யிருக்கிறார்.

அந்தப் பேச்சைப் பார்த்த பின் அமெரிக்காவை நம்பிய நாடுகளும், அதனிடம் கடன் வாங்கிய நாடுகளும், அதன் தயவை எதிர்பார்த்த நாடுகளும் அதன் செய்கையை கண்டித்திருக்கிறது.

பல நாடுகளின் தலைவர்கள் கண்டித்திருக்கிறார்கள்.

ஒரு விமானம் தான் பறந்தது என்று குருசேவ் சும்மா இருந்தால் இந்த நிலை ஏற்பட்டிருக்குமா?

துருக்கியில் அரசே கவிழ்ந்து விட்டது. ஜப்பானில் அரசு கவிழும் நிலைக்கு வந்து விட்டது,

நாம் இனி வாளாக இருந்தால் நம் நிலை மோசமாகி விடும்,

இப்போது வந்துள்ள இந்தியை எதிர்த்துப் போராடா விட்டால் அனேக நூற்றாண்டுகளுக்குத் தலை தூக்க முடியாது!

நமக்கு 'கனம்களாக" வாய்த்திருப்பவர்கள் மண்டை கனம்களாக இருந்து வெறி பிடித்தலைகிறார்கள்.

வட நாட்டவருக்கு இருக்கும் விடுதலை உணர்ச்சி கூட நமக்கு இல்லை.

சமீபத்தில் சீனாவின் அமைச்சர் சூ-யென் லாய் டில்லிக்கு வநதார்.

அவர் நேருவின் விருந்தினராகத் தங்கினார். வட நாட்டிலுள்ள புரட்சி மனப்பான்மை கொண்டோர் அவர் இந்தியா வருவதை எதிர்த்தார்கள். அவர்களின் எண்ணத்தை அறிவிக்க ஒரு மாபெரும் ஊர்வலத்தை நடத்தினார்கள். நேருவின் இல்லத்திற்கு அந்த ஊர்வலம் சென்றது. "நேரு ஒழிக" "சைனா ஒழிக" சூயென்லாய் ஒழிக என்று முழககமிட்டுச் சென்றார்கள் இவர்களின் உணர்ச்சியை எந்த அதிகார பலமும் தடுகக முடியவில்லை,

நேரு வந்து அவர்களிடம் கெஞ்சி நம் நாட்டுக்கு வந்துள்ள விருந்தினரை அவமதிக்கக் கூடாதெனசமாதானப்படுத்திய பின் திரும்பினார்கள்,

இந்த உணர்ச்சியை காமராசர் போல் நேரு தடுக்கவில்லை.

டில்லியில் இன்னுமொரு சிறிய நிகழ்ச்சி நடந்தது, டில்லியிலேயே பெரிய வியாபார இடமும், ஒரு பெரிய தியேட்டர் இருக்கும் இடமாகிய "கான்ட் பிளேஸ்" என்ற இடத்தில் 75 டாக்சிகள் நின்றிருப்பது வழக்கம், அந்த இடத்தில் கார்கள் நிற்பது போக்கு வரத்துத் தடை யென்று டில்லி அரசாங்கம் நினைத்தது. அங்கு இனிமேல் நிற்கக் கூடாதென தடை விதித்து உத்திர விட்டது. அதை எதிர்த்து கார்களின் சொந்தக்காரர்கள் அமைச்சர்களைப் பார்த்தார்கள் பயன் ஏற்படவில்லை.

ஒரு நாள் டில்லியிலுள்ள டாக்சிகாரர்களும் மற்றும் ஸ்கூட்டர் ஓட்டுபவர்களும் வேலை நிறுத்தம் செய்தார்கள் ஏராளமான கார்களை அந்தப் பகுதியில் கொண்டு வந்து நிறுத்திவிட்டு அவர்களை பூட்டி விட்டுப் போய் விட்டார்கள் அங்கு போக்குவரத்து, வியாபாரமும் ஸ்தம்பித்தது ராணுவமும், போலீசும் வந்தது. கார்களை உடைத்தார்கள். எது செய்தும் பலனளிக்கவில்லை, உடனே அரசாங்கம் தனது உத்திரவை திருப்பி பெற்றுக் கொண்டது,

இது சிறிய விஷயம் தான் ஆனால் அதன் விளைவு என்ன வாயிற்று. அதிகாரிகளின் அடக்கு முறை அவர்கள் வீரத்தின் முன் நிற்க முடியவில்லை.

எப்படி அவர்களுக்கு அந்த வீர உணர்ச்சி வந்தது அந்த உணர்ச்சி நமக்கு வராதா நமது கழகம் போர்க் கொடியை உயர்த்தி விட்டது.

நமது தோழர்கள் இன்று எங்கும் புயல் வேகத்தில் சுற்றுகிறாகள் பல ஊர்களில் நமது கூட்டங்கள் தினம், தினம் நடக்கிறது, அண்ணா ஒரு ஊரில் அன்பழகன் ஒரு ஊரில் நெடுஞ்செழியன் ஒரு ஊரில், கருணாநிதி ஒரு ஊரில என்று பல கூட்டங்களில் பேசுகிறார்கள் அவர்கள் போராட்டத்தைப் பற்றியே பேசி வருகிறார்கள்.

வட நாட்டார் ஆண்டவர்கள் இல்லை, அவர்களின் நாட்டை பல சமயம் படையெடுக்கப்பட்டிருக்கிறது இது வரலாறு கூறுகிறது.

நமது அண்ணாவும் பல முறை கூறியிருக்கிறார். இந்தியாவிற்கு பலர் படையெடுத்து வந்திருக்கிறார்கள் என்று அப்படிப்பட்டவர்களுககு வீரம் இருக்கும் போது ஆண்ட பரம்பரையினரான நமக்கு வீரம் இல்லாமலா போய்விடும்.

ஆகவே வெகு விரைவில் பெரும் போராட்டம்—நமது இலட்சியப் போராட்டம் வரப் போகிறது. இதில் ஆட்சியாளர்கள் பல அடக்குமுறைகளிலும் அதிகார பலத்தாலும் அடக்கப் பார்க்கலாம். இந்தப் போராட்டத்தால் நம்மில் பலர் உயிர் இழககலாம் அடக்கு முறைக்காளாகி நம்மில் பலர் இல்லாது போனாலும் போகலாம். ஆனால் வெற்றி நமக்குத்தான் பலனை நாம் அனுபவிக்காது போனாலும் போகலாம், ஆனால் நம் பின் சந்தியார்கள் வளமாகவாழ்ந்து நம்மை வாழ்த்துவார்கள்.

நாஙகள் இன்று பல கூட்டங்கள் போட்டு உங்கள் முன் ஏன் பேசுகிறோம் என்றால், ராணுவ வீரர்களுக்கு போர் அறிவிப்பை அறிவிப்பது போன்று சமீபத்தில் வரும் போராட்டத்தைப் பற்றி அறிவிக்கவே பேசுகிறோம்.

இந்தப் போராட்டம் பலம் வாய்ந்ததாக—கடுமையானதாக இருக்கும்.

இன்று திராவிட முன்னேற்றக் கழகத்தில் போராட்ட போட்டி பலமாக இருக்கிறது வேறு எதிலும் போட்டி இல்லை,

நமது கருணாநிதி ரயில் சங்கிலியைப் பிடித்திழுத்து சக்கரத்தில் தலையை வைக்க வேண்டுமென்று கூறுவார்.

நமது கண்ணதாசன் மந்திரிகளின்கார்களை நிறுத்திபோராட வேண்டுமென்பார்.

நமது அன்பழகன் ஒல்லியான உருவமாக இருந்தாலும் சட்டமன்றத்திற்குச் சென்று காமராசருக்குக் கருப்புக்கொடி பிடிக்க வேண்டுமென்று கூறுவார்.

இதை அறியாது சில ஆபாசப் பத்திரிகைகள் கழகத்தில் போட்டி என்று கூறுகிறது. இதையெல்லாம் பொருட்படுத்தாது போட்டத்தில் ஈடுபட தயாராகுங்கள், கழகக் கட்டளையை எதிர்பாருங்கள்.

குமார பாளையத்தில் நடக்கும் பொதுக் குழுவில் போராட்டத் திட்டம் வகுக்கப்படும். அதை ஆட்சியாளர்கள் காணத்தான் போகிறார்கள்.

இன்று நம் நாட்டிலுள்ள அடிமைத்தனத்தை நமது தலைமுறையிலேயே அகற்றி விட வேண்டும். ஆகவே அதற்கான வகையில் பாடுபட முன் வாருங்கள் என்று கேட்டு விடை பெறுகிறேன்.

காமராஜர் காட்டும் துப்பாக்கி தோட்டா இல்லாத துப்பாக்கி !

(சம்பத் பேச்சு)
(5-ம் பக்கத் தொடர்ச்சி)

மக்களுடைய உரிமைகளேயும் நலனேயும் பாதுகாக்க வேண்டிய ஜில்லாக் கலெக்ட்டர்கள் மற்றுமுள்ள அதிகாரிகள் மந்திரிகளே வரவேற்கும் வரவேற்பாளர்களாக மாறிவிட்டார்கள். அமைச்சர்கள் கூட்டங்கள் எப்படி நடக்க வேண்டும் அவர்களுக்கு எந்தவிதத்தில் மாலேகள் போடவேண்டும்!எப்படி வரவேற்புகள் கொடுக்க வேண்டும் என்பதில் அதிகாரிகள் அக்கரை செலுத்தி வர ஆரம்பித்திருக்கிருர்கள் !

தஞ்சை ஜில்லாவிலுள்ள பாபநாசத்திற்கு கூட்டத்திற்கு வருவதாக இருபது தினங்கட்கு முன்பே தேதி கொடுத்திருந்தேன் நமதியக்கத் தோழர்கள் கூட்டத்தை நடத்த ஆடம்பரமாகவும், தடபுடலாகவும் ஏற்பாடுகள் செய்திருந்தார்கள். அனுமதி கிடைக்கவில்லே பல நாட்களுக்கு முன்பே அனுமதிக்கு எழுதியிருந்தார்கள் ஆனல் கூட்டம் நடத்துவதற்கு முதல் நாள் வரை அனுமதி வரவில்லே,

அதே தேதியில், முதலமைச்சர் காமராசர் அந்த ஊருக்கு வருவதாகத் திட்டம் போட்டிருந்தார்கள், காமராசர் வருவதால் நமது கூட்டம் நடக்கக் கூடாதென அதிகாரிகள் நினைத்து நமது செயலாளரிடம் வந்து முதலமைச்சர் காமராசர் வருவதால் சம்பத்து கூட்டத்தை ரத்து செய்யுங்கள்" என்று கூறியிருக்கிருர்.

நமது செயலாளர் அதை மறுத்து "சம்பத்து 20 தினங்கட்கு முன்பே அனுமதி கொடுத்து விட்டார். அந்த கூட்டத்தை ரத்து செய்ய முடியாது என்று கூறிவிட்டார், இருந்தாலும் அனுமதி கிடைக்கவில்லே.

ஆட்சியாளர்கள் நாட்டிலே நல்ல நிலேமை ஏற்படக் கூடாதென்ற காட்டுக் குணம் படைத்திருக்கிருர்கள் என்று மக்கள் உணர்ந்து கொள்ளும் நிலே வந்து விட்டது!

அமைச்சர்கள் வந்தால் மற்றவர்கள் கூட்டம் நடத்தக் கூடாதா? இதைப் பிரகடனப் படுத்தி விடட்டுமே

நமது செயலாளர் நான் அடுத்த ஊர் கூட்டத்திற்கு வந்திருந்த என்னிடம் வந்து விபரத்தைக் கூறினர். நான் அவரைக் கடிந்து கொண்டு, நாம் ஏழாண்டுகட்கு முன் தீர்மானம் செய்திருப்பதை மறந்துவிட்டீர்களா? அல்லது நான் கோழையாகி விட்டேனென்று எண்ணி விட்டீர்களா?

நம்முடைய பொதுக்குழு முன் அனுமதிகேட்டோ, அனுமதி பெற்ருே இருக்கும் கூட்டங்களுக்கு சர்க்கார் தடைவிதித்தால் அனுமதி மறுக்கப்பட்டால் மீறி கூட்டத்தை நடத்த வேண்டுமென்று முடிவு செய்திருக்கிறதே இதை ஏனென்ன தால் மறந்து விட்டீர்களா என்று கேட்டேன்

உங்கள் அபிப்பிராயம் கேட்க வந்தேன் என்று கூறி விட்டு ஊர் சென்று இன்னும் மிக ஆடம்பரமான முறையில் கூட்ட வேலேகளேச் செய்தார் அதிகாரிகளிடமும் கூறிவிட்டார் எங்கள் கூட்டம் நடக்கும் சம்பத்தும் வருகிருர் அனுமதி கொடுத்தால் கொடுங்கள்; கொடுக்காவிட்டால் தேவையில்லே என்று கூறிவிட்டார்.

இந்தச் செய்தி எங்கும் பரவியது ஒரேபரபரப்பு நகரெங்கும் வளேவுகள் தோரணங்கள் இதை கண்ட அதிகாரிகள் பயந்து விட்டார்கள் அமைச்சருடன் கலந்தார்கள்.

உடனே நமது செயலாளரின் வீடு தேடிவந்து அதிகாரிகள் அனுமதி கொடுத்தார்கள்

இந்த ஆட்சியாளர்களின் செய்கை அடங்கியவர்களே மிரட்டுவதும் எதிர்ப்பவர்களே கண்டு பணிவதுமான நிலேயில் தான் இருந்து வருகிறது.

பின்னர் நம் செயலாளரை அதிகாரிகள் அழைத்து கூட்டத்தை நடத்திக் கொள்ளுங்கள், ஆனல் முதலமைச்சர் வந்து பேசி விட்டுப் போகும் வரை நமது இருவண்ணக் கொடிகளேயும் தோரணங்களேயும் வளேவுகளேயும் இறக்கிவையுங்கள் என்று கேட்டார்கள் நமது தோழர்கள் அதற்கு ஒத்துக் கொள்ளாது எங்களில் நூறு பிணங்கள் விழுந்தாலும் சரி எங்களில் எத்தனேப் பேருக்கு என்ன ஆபத்து நேர்ந்தாலும் சரி ஏற்றிய கொடிகளே இறக்க மாட்டோம் அதனல் என்ன கேடுகள் ஏற்பட்டாலும் சரி அதை ஏற்கத்தயார் என்று கூறி விட்டார்கள்

அதற்குப்பின் அதிகாரிகள் கூட்டம் நடத்தும் நேரத்தில் பேரம் பேசவந்தார்கள்

காமராசர் கூட்டம் 6 மணியிலிருந்து ஒன்பது மணிவரையும் என் கூட்டம் ஒன்பது மணியிலிருந்து பதினேருமணிவரையும் நடத்தி கொள்வதெனவும் முடிவுக்கு வந்தார்கள் நம் தோழர்கள் ஒப்புக்கொண்டார்கள் ஆனல் முதலமைச்சர் காமராசர் தாமதமாக ஒன்பது மணிக்கு வந்தார் நான் குறிப்பிட்டபடி நமது கூட்டம் நடைபெறும் இடத்திற்கு ஒன்பது மணி பத்து நிமிடத்திற்குச் சென்றேன்

காமராசர் கூட்டத்தில் கூடியிருந்த மக்கள் எல்லாம் என்னுடைய கூட்டத்திற்கு வந்துவிட்டார்கள் காமராசர் கூட்டத்தில் மக்கள் கூட்டம் இல்லே. இதற்கு யார் என்ன செய்ய முடியும்?

அமைச்சரின் கூட்டத்திற்கும், அமைச்சருக்குப் பாதுகாப்பளிப்பதிலும் அதிகாரிகள் அவ்வளவு அக்கரை காட்டுகிருர்கள். பொது மக்களின் பாதுகாப்பிற்காக இருக்கும் அதிகாரிகளுக்கு ஏன் இந்த பாரபட்சம்.

காமராசர் பேசும் மைதானம் காலியாக இருந்தவுடன் காமராசருக்குக்குக் கோபம் வந்து விட்டது. நம் கழகத்தையும், தலேவர்களேயும் காமராசர் கடுமையாகத் தாக்கி பேசி யிருக்கிருர்.

மைதானம் காலியாக இருந்தவுடன் அங்கு வழக்கமாக வந்து சேரும் பன்றிகள் வந்து இருக்கின்றன அதைப் பார்த்து மிகவும் ஆத்திர மடைந்த காமராசர், "திராவிட முன்னேற்றக் கழகத்தார் காலிகள் என்றும், அதிலுள்ளவர்கள் பன்றிமேய்ப்பவர்கள் என்றும், திராவிட முன்னேற்றக் கழகத்தை ஒழித்து விடுவேனென்றும்" தாக்கி யிருக்கிருர்.

நம்மைப் பார்த்து பன்றி மெய்ப்பவர்கள் என்று கூறுவதால் நமக்கு இழிவில்லே. அந்த வேலேயை நாம் இழிவாகவும் நினேக்கவில்லே. அந்த வேலே செய்து கொண்டிருக்க வேண்டியவர்கள் பலர் இன்று மந்திரிகளாக இருக்கும் போது நாம் ஏன் அவர் கூறுவது பற்றிக் கவலேப்படுகிறேம்.

இன்று கூட்டங்களில் காமராசர் நம்மையும், நம் தலேவர்களேயும் "இவன், அவன் என்று பேசி வருவதாக பலர் என்னிடம் கூறி வருத்தப்பட்டார்கள்.

குடந்தையிலுள்ள நமது இயக்கப் பிரமுகரும், மிகவும் கண்ணியம் வாய்ந்தவரும், பொறுப்பு வாய்ந்த வருமான திரு. வி. சின்னத்தம்பி அவர்களே அமைச்சர்கள் கண்ணியக் குறைவாகவும் இழிவாகவும் பேசி வருவதைக் கூறி வருத்தப்பட்டார்கள். இதை எல்லாப் பகுதியிலுள்ளோரும் கூறினுர்கள்.

காமராசர் "திராவிட முன்னேற்றக் கழகத்தை ஒழிப்பேன், அழிப்பேன் என்று கூறுகிருர அவருக்கு அதிகாரமும் அதிகாரிகளின் ஒத்துழைப்பும் இருக்கிறதென்ற எண்ணத்தால் ஆட்சி தன்னிடம் இருக்கிறதென்ற தைரியத்தால் இவ்வாறு பேசுகிருர். பேசட்டும் முடிந்தால் நம்மை அழிக்கட்டும்

பாப நாசத்தில் அமைச்சருக்கு அவமானம் வந்து விட்டதென்று அதிகாரிகள் எண்ணி நம்மைப் பழிவாங்க நினேத்தார்கள்

நான் கருந்தட்டாங்குடிக்கு நமதியக்கத் தோழர்களுடன் போய்க் கொண்டிருக்கும்போது என் காரை நிறுத்தி போலீசார் சோதனே போட்டார்கள். ஏன் என்று கேட்டேன் மது விலக்கு பரிசோதனே என்று கூறி பல மணிநேரம் வண்டியை நிறுத்தி சோதனே இட்டார்கள்

இன்று காங்கிரஸ் காரர்கள், மந்திரிகள் கார்களே மதுவிலக்

(11 ம் பக்கம் பார்க்க)

இந்தி வந்தே தீருமாம் ! அப்படி என்ருல் கோவை நடந்தே தீரும் !

நமது நிதி அமைச்சர் கனம் சுப்பிரமணியம் "இந்தி வந்தே தீரும்" என்று, புன்னகை அரும்பு உதட்டால் வீரமுழக்கம் புரிந்திருக்கிருர் !

என்ன செய்வது ? நமக்கு வாய்த்த அமைச்சர் இப்படிப்பட்ட அமைச்சராக இருக்கும போது இந்தி வந்துதான் தீரும்! ராமமனேகர் லோகியா, தைரியமாக, துணிவாக, நெஞ்சுறுதியோடு—அமைச்சர் சுப்பிரமணியத்தை பக்கத்தில் வைத்துக் கொண்டே சோடா புட்டிகளே எடுத்து வீசி நம் மண்டைகளே உடைக்கத்தான செய்வார்!

தாராளமாகச் செய்யட்டும்! ராம் மனேகர் லோகியா சோடா புட்டிகளே எடுத்து வீசட்டும், அசோக்மேத்தா கல்லால் அடிக்கட்டும் யாருக்கு என்ன நஷ்டம்?

"கோவைச்சீமான் மந்திரியாக இருந்த காலத்தில், அவருடைய கையாலாகாதத் தனத்தால் தமிழர்களுடைய மண்டைகளே வடவர்கள் சோடா புட்டிகளேக் கொண்டு உடைத்தார்கள்" என்று சரித்திரம் கூறட்டும்! யாருக்கு என்ன கவலே?

காட்டிக் கொடுக்கும் நம் அமைச்சர்கள் யாரோடு வாழப் போகிறார்கள் !

டெல்லியிலா ? சென்னையிலா ?

எங்கள் போராட்டம் இதை முடிவு செய்யும் !

(சம்பத் பேச்சு)
(4ம் பக்கத் தொடர்ச்சி)

டோம் என்று கூறியிருக்க வேண்டும் அப்படி அன்று கூறியிருந்தால் இன்று இந்தியில் தான் பேசுவேன் என்று பிடிவாதம் செய்திருக்க மாட்டார்.

அவர் நமது பலஹீனத்தை, வளைந்து கொடுக்கும் தன்மையையும் தெரிந்தே அவர் வெறித் தன்மையில் இறங்கி இருக்கிறார்!

நாம் ‘ அவருக்கு தமிழ் தெரியாதே அவரை எப்படி தமிழில் பேசும்படி கூறுவது என்று நினைத்து ஆங்கிலத்தில் பேசு என்று அன்று கூறியதை தமது பலஹீனம், நாம் தைரியமற்றவர்கள். வீர மற்றவர்கள் கோழைகள் என்று எண்ணும்படி செய்து விட்டது.

நம்முடைய அரசியல் நாகரீகத்தையும், சமரச நோக்கத்தையும் தவருக-தப்பாக எண்ணி விட்டார். நாம் ஆங்கிலத்தில் பேசு என்பதையே வடவர்கள் பிற்போக்குத் தன்மை என்று கருதுகிறார்கள்.

இங்கு வரும் வடநாட்டு இந்தி வெறியர்கள் அவர்களை இந்தியில் பேச அனுமதிப்பதை நமக்கு இந்தி புரிகிறது, இந்தியை நன்கு படித்திருக்கிறோம் என்று எண்ணியிருக்கிறார்கள். இந்த மனப்பான்மையை நாம் அறவே ஒழிக்க வேண்டும் இங்கு வருபவர்கள் ‘‘இந்தியில் பேசலாமா’’ என்று நம்மை கேட்பதே அவமானம் என்று நாம் நினைக்க வேண்டும். எவ்வளவு பெரியவர்களானாலும், எப்படிப்பட்ட செல்வாக்கு வாய்ந்தவர்களானாலும் இந்தியில் பேச அனுமதிக்கக் கூடாது.

பண்டித நேரு வங்காளும் நம்மிடம் இந்தியில் பேசுவதா? ஆங்கிலத்தில் பேசுவதா என்று கேட்கிறார்.

அவரிடம் தயவு தாட்சன்னியமின்றி நேருவே இங்கு இந்தியில் பேசாதே தமிழ் பேசு, தமிழ் தெரியா விட்டால் பேசாதே இந்த நாட்டை விட்டு போ என்று கூறியிருக்க வேணடும்,

நாம் அவர் பெரியவராயிற்றே உலகத்தில் பெரும் மதிப்பு படைத்தவராயிறறே என்று நினைத்த பெருந்தன்மை தான் இன்று நம்மை அவர்கள் இழிவாக எண்ணும்படி செய்துட்டது.

உலகத்தில் உள்ள நாடுகள் எல்லாம் இன்று தங்கள் உரிமைக்காகப் பலமான கிளர்ச்சிகள் நடத்துகிறது உரிமை பெற்ற நாடுகளைத் தான் உலகில் மதிக்கப்படுகிறது உரிமையிழந்து கீழே தள்ளப்பட்ட நாடுகள் இன்று உரிமைக்காக பலமான போராட்டங்கள் செய்து வருகிறது! அதே போன்று நாம் நமது உரிமைகளைப் பெருவதில் முரட்டுத் தனத்தைக் காட்ட வேண்டும் நமது உரிமையை நிலை நாட்டுவதில் எந்தவித தொல்லைகளையும், துயரங்களையும் அனுபவிக்க தயாராக இருக்க வேண்டும்.

பலநாடுகள் உரிமைக்காக பல உயிர்களை பலியிடத் தயாராக இருக்கின்றன. அப்படிப்பட்டவர்களைத் தான் நேரு முதல் பலர் மதிக்கிறார்கள்,

நாமும் மதிக்கப்பட வேண்டுமானால், நம் உரிமையைப் பெற வேண்டுமானால் நம்முடைய ரதத்தில் சூடு பிறக்க வேண்டும்,

இன்று நம்முடைய பலஹீனத்தைக் கண்டு பெரிய மனிதர்கள் என்பவர்கள் சின்ன புத்தி படைத்து அவமதிக்கிறார்கள்.

ஆகவே இனிமேல் இங்கு வந்து நம் மொழியில் பேசாதவர்களை ‘‘நீங்கள் பேச வேண்டாம் வேண்டுமானால் பத்திரிகை நிருபர்களை வைத்து அறைகளில் பேசுங்கள் நாங்கள் பத்திரிகைகளில் பார்த்து தெரிந்து கொள்ளுகிறோம் என்று தைரியமாகக் கூறிவிட வேண்டும்.

அந்த முறையில் நடந்து கொண்டால் தான் வட நாட்டிலுள்ளவர்கள் இனி தமிழ் நாட்டில் போய் இந்தியில் பேச முடியாது, அவர்களுக்கு மொழி பற்று நாட்டுப் பறறு உரிமை உணர்ச்சி வந்து விட்டது, அவர்களுககு விடுதலை வேகம் வந்து விட்டது என்று எண்ணுவார்கள்.

இன்று வடவர்களின் எடுபிடிகளாக உள்ள நமது அமைச்சர்களும், வடநாட்டு ஏகாதிபத்திய வெறியர்களும் நம்மை சொரணையற்றவர்கள், ஆட்டு மந்தைகள், சோற்றாலடித்த பிண்டங்கள் என்று மதித்துக் கொண்டிருக்கிறார்கள்.

அவர்கள் அப்படி எண்ணிக் கொண்டிருப்பதை முறியடிக்க வேண்டும்.

உலகத்திலேயே நம்மை விட ஆற்றலில் மிக குறைந்தவர்களும் நாகரீகமற்றவர்கள் என்று பலரால் நினைக்கும் நிலையிலுள்ளவர்களும், இருண்ட காட்டில் வாழ்ந்து வருபவர்களுமான ஆப்பிரிக்கர்களின் நிலையை நாம் சற்று சிந்தித்துப் பார்க்க வேண்டும். அவர்கள் தங்கள் உரிமைக்காக எப்படிப்பட்ட வல்லரசுகளுடன் போராடுகிறார்கள் என்பதை எண்ணிப் பார்க்க வேண்டும்.

நாமாவது ஓட்டுரிமை பெற்றிருக்கிறோம் ஆப்ரிக்க நாட்டிலுள்ளவர்கள் ஓட்டுரிமையை பெறவில்லை. அவர்கள் தங்களுக்கு ஓட்டுரிமையை விட உரிமையே பெரிதென எண்ணி தங்களது போர்க் கொடியை உயர்த்தி விட்டார்கள்.

உலகத்திலுள்ளவர்களின் கவனங்களை யெல்லாம் தங்கள் பக்கம் திருப்பி விட்டார்கள்.

தங்களது நாட்டுக்காக, தங்களது மண்ணுக்காக, தங்கள் நிலத்துக்காக தங்கள் இன்னுயிர்களையே பலியிடத் துணிந்து விட்டார்கள்.

ஏகாதிபத்தியத்திற்கே முதலிடமான பிரிட்டிஸ பிரதமரே அவர்களது வீரத்தையும், போர் குணத்தையும் கண்டு அவரது மனதை மாற்றி ‘‘காற்று வேறு பக்கம் அடிக்க ஆரம்பிதது விட்டது’’ என்று கூறி அடக்கு முறையைக் கையாளுபவர்களுக்கு எச்சரிக்கை விடுக்க ஆரம்பித்து விட்டார்.

இனி அடக்கு முறைகளோ, அதிகார வெறியோ தலை தூக்க முடியாது என்று தெள்ளத் தெளிய கூறி விட்டார்,

பண்டித நேரு பாராளுமன்றத்தில் தென்னாப்பிரிக்க நிகழ்ச்சியைப் பற்றி பேசும் போது அங்கு நடைபெறுவது புரட்சியின் ஆரம்பம், அது முடிவல்ல என்று கூறி புளகாங்கிதமடைந்து பேசினார்.

அங்கே சுட்டு வீழ்த்தப்பட்டும் பல பேர் மரணமடைந்தும் தங்களது உள்ள உரத்தை தளர்த்தவில்லை, அவர்கள் அங்கு நடைபெறும் வெறித் தன்மையைக் கண்டு தளர்ந்து விடவில்லை இன்னும் விடா முயற்சியுடன் போராடுகிறார்கள்,

நாமும் நமது உரிமையைப் பெற அதைவிட கடுமையாகப் போராட வேண்டும்.

ஆப்பிரிக்காவில் தினம் தினம் சாகின்றவர்கள் போக மீதியுள்ளவர்கள் நாங்கள் தயார் நாங்கள் தயார் என்று முன் வருகிறார்கள். அவர்கள் தங்கள் உரிமைக் குரலை தினம், தினம் முழக்கிக் கொண்டிருக்கிறார்கள்.

நாம் இவைகளைச் சற்று எண்ணிப் பார்கக வேண்டாமா? நாம் என்ன கோழைகாளா அவர்களுக்கு இருக்கும் வீரம் நமக்கு வேண்டாமா!

நம்முடைய கழகம் ஆரம்பிக்கப் போகும் போராட்டம் சாதாரணமாக இருக்காது. அது மிகப் பலம் வாய்ந்த போராட்டமாக இருக்கும். உலகமே கண்டு திகிலடையும் படியான பெரும் போராட்டமாக இருக்கும் அமெரிக்க நாட்டு வேவு பார்க்கும் விமானம் சோவியத் நாட்டில் பறந்த போது உலகத்தில் எத்தகைய பரபரப்பையும் உணர்ச்சியை ஊட்டியதோ அதே போன்று இருக்கும் இதைப்போல தான நமது போர்முறை இருக்கும்,

இன்று ஏற்படாத முன்பே அரசினர் தக்கது செய்ய வேண்டும், அதை நடைபெறாத முறையில் வகை செய்ய வேண்டும்.

இதை நமக்கு ஏற்பட்டிருககும் உணர்ச்சியை, யாரும் சாதாரணமாக மதிக்கக் கூடாது. இதற்கு முன் யாராவது நம்மை அவமதித்துப் பேசினல் நம்மை இழிவாக மதித்தால் வருத்தப்படுவோம் இன்று அந்த நிலை மாறி விட்டது.

இன்று நமது தோழர்கள் அப்படிப் பேசுவதை சகியாது கடும் வேகமாக, ஆத்திரமாக மெய்சிலிர்க்கும்படி பேசி வருகிறார்கள், இதைப் பார்த்து நானே மெய் மறந்து விடுகிறேன்.

நாம் இதுவரை கண்ணியத்தையும, வரம்பையும் எல்லையையும் பார்த்துப் பேசி என்ன கண்டோம்.

(10-ம் பக்கம் பார்க்க)

அடிமைப்பட்ட நாட்டவருக்கு அரசியல் நாகரீகம் தேவையில்லை!

அகில உலகமே திடுக்கிடும் முறையில் நம் போராட்டம் இருக்கும் !

(சம்பத் பேச்சு)

(9ம் பக்கத் தொடர்ச்சி)

அதனால் யார் நம்மை மதித்தார்கள்.

உரிமைப் போராட்டம் நடத்தியவர்கள் தோல்வியடைந்ததில்லை. "கொல்லப்பட்டார்கள் மரண மடைந்தார்கள், அடக்கு முறைக்காளானார்கள் என்ற வரலாறுகளைத் தான் பார்த்திருக்கிறோம் தோற்றார்கள் என்ற வரலாறுகளை நாம் பார்த்ததில்லை.

ஆகவே நாமும் நம்முடைய உரிமையை பெறுவதற்கான விடுதலைப் போராட்டத்திற்கு தயாராக வேண்டும்.

நம்முடைய முறைகளே, செய்கைகளே, பேச்சுகளே, எழுத்துக்களே அது போன்று தான் இருக்க வேண்டும். அதற்கான முறையில் தான் மக்களை தயார்படுத்த வேண்டும்.

நாம் நம்முடைய விடுதலை உணர்ச்சியை உயிரினும் மேலாக மதித்து வருகிறோம். அதை வெறும் விளையாட்டாகவோ, வேடிக்கையாகவோ மதிக்கவில்லை. நாம் வெறும்மேனிமினிக்கிகளாக மட்டும், சோற்றுச் சுவை யறியும் சோம்பேறிகளாக மட்டும் இருக்க எண்ணவில்லை. நம் நாட்டை விடுதலை யடையச் செய்ய வேண்டும். நாம் இழந்த உரிமையைப் பெற வேண்டுமென்பதற்கே பாடுபடுகிறோம். அதற்காகவே போராட்டம் நடத்தப் போகிறோம்.

காலித்தனமோ, கட்டுக் கடங்கா தன்மையோ நிலை பெற வேண்டுமென்று நான் ஆசைப்படவில்லை. காலித்தனம் செய்வதற்கு ஒரு மாபெரும் இயக்கம் தேவையில்லை. ஒரு தனி மனிதனே அந்தக் காரியத்தைச் செய்து விடுவான். புரட்சிக்கும், காலித்தனத்திற்கும் பலவேறு பாடுகள் இருக்கிறது. முரட்டுத் தனமாகவும், மூர்க்கத்தனமாகவும் போராடுவதை காலித்தனம் என்று கூறமுடியாது எங்களுக்குப் பதவி முக்கியமல்ல. இன்று பதவியிலுள்ள எட்டு மந்திரிகளின் நாற்காலிகளையும் காலி செய்து விடடு. அவர்கள் சமூகத்து போய் குடி நீங்காதமன் உட்கார வேண்டுமென்று நாங்கள் விரும்பவில்லை.

இன்று நமது அமைச்சர்கள வடநாட்டவரின் ஏஜண்டுகளாக எடு பிடிகளாக, காட்டிக் கொடுப்பவர்களாக இருந்து வருகிறார்கள்.

திருடர்களுக்கு தீவிட்டி பிடிப்பவர்களாக இருந்து வருகிறார்கள், இன்று நமது போராட்டை அடக்குவதற்கு அவர்களுக்குக் கையாட்களாக இருந்து வருகிறார்கள், இன்று நாம் எரிமலைகளாக இருந்து வருகிறோம், அந்த நிலையிலிருப்பவர்கள் முன் எந்த எதிர்ப்புசக்தியும் ஒன்றும் செய்ய முடியாது,

நமது மந்திரிகள் நமது போராட்டத்தை அடக்க ஏதாவது அடக்கு முறையைக் கையாண்டால் அதை நாம் தவிடு பொடியாக்குவோம்.

நம்முடைய போராட்டம் நிச்சயமாக ஒன்றைச் செய்தே காட்டும். சென்னையிலுள்ள மந்திரிகள் டில்லிக்காரர்களுக்கு உடந்தையாக இருந்தால் அவர்கள் டில்லிக்கேப் போய்விட வேண்டிய நிலை ஏற்பட்டுவிடும்.

நமது மந்திரிகள் இங்கிருக்க வேண்டியவர்களா? டில்லிக்குப் போய்விட வேண்டியவர்களா என்பதை நமது போராட்டம் எடுத்துக் காட்டத்தான் செய்யும்!

நமது மந்திரிகள் இன்று இந்தி வெறியர்களுக்கு கைலாகு கொடுக்கும் கங்காணிகளாக இருந்து வருகிறார்கள், இந்தி வெறியர்களை ஆதரிப்பவர்களாக இருந்து வருகிறார்கள் அந்த நிலை என்றுமே நிலைத்திருக்க முடியாது. தமிழர்கள் என்றும் பசுக்களாக, பூனைகளாக இருந்துவிட மாட்டார்கள் புலிகளாக மாறி விடும் நிலைவரத்தான் போகிறது. அப்போது இந்த அமைச்சர்களுக்கு தாங்க முடியாத நிலை ஏற்படத்தான் போகிறது,

நம்முடைய போராட்டத்தைப் பற்றி காமராசர் கேலி செய்து இவர்கள் போராடி என்ன செய்து விடுவார்கள் என்று கேட்டு "கல்கத்தாவாக்குவார்களா" என்று கேட்டாராம்.

இங்கு கல்கத்தா ஆக்கமுடியாது என்று அமைச்சர்கள் நினைக்க வேண்டாம், அந்தநிலை ஏற்படும் நாளும் அமைச்சர்கள் எதிர் பார்த்தால் வந்து தான் தீரும்.

அரசியலில் நாகரீகம் தேவை தான். அந்த நாகரீகம் அடிமைப்பட்ட நாட்டவருக்குத் தேவையில்லை.

அடிமைப்பட்ட நாட்டை விடுதலையடையச் செய்ய வீர உணர்ச்சி தேவை. முரட்டுத்தனமும் மூர்க்கத்தனமும் அவசியம் தேவை.

நாம் முன்பு இரயில் நிலையத்தில் இந்தி எழுத்துக்களை அழித்தோம். மீண்டும் இந்தியில் எழுத ஆரம்பித்து விட்டார்கள் மீண்டும் இனி என்ன செய்வது என்பதை தீர்மானிக்க வேண்டும். இனி இந்தியில் எழுதும் பலகைகளை அழிப்பதா? நிர்மூலமாக்குவதா என்பதை நாம் தான் நிர்ணயிக்க வேண்டும்.

நமது அமைச்சர் காமராசர் துப்பாக்கிகளைக் காட்டி மிரட்டுகிறார். திருடர்களைச் சுட வேண்டிய துப்பாக்கி திருடர்களுக்கு ஆதரவு கொடுக்க உதவுகிறது.

இன்று காமராசர் காட்டும் துப்பாக்கிகள் துருப்பிடித்த துப்பாக்கிகள் அவைகளைக் கண்டு நாம் அஞ்சப் போவதில்லை,

ஆகவே விடுதலையை விரும்பும் வீரர்களை அந்தத் துப்பாக்கிகள் ஒன்றும் செய்துவிட முடியாது!

இன்று மந்திரிகள் இந்தி விஷயத்தில் தங்களது எண்ணத்தை மக்கள் அறியும்படி செய்து விட வேண்டும், இங்கு இந்தியை எதிர்ப்பவர்கள் போல் நடித்துக் கொண்டு டில்லிவெறியர்களுக்கு அடிமைகளாக இருந்து கொண்டிருக்கக் கூடாது.

தமிழ் நாட்டிலுள்ளவர்களையெல்லாம் நமது அமைச்சர்கள் விரல் சூப்பிக் கொண்டிருக்கும் குழந்தைகள் என்று நினைத்துக் கொண்டிருக்கக் கூடாது!

முதலில் நமது மந்திரிகளுக்கு 'தாசர் புத்தி' கூடாது. அவர்களுக்கு நல்ல முறையில் ஆட்சி செய்ய முடியா விட்டால் அதை விட்டுப் போய் விடட்டும்.

இன்று டில்லியிலுள்ள அரசு நம்மைப் பாதுகாக்கும் அரசு அல்ல, நம்முடைய நலனுக்காக இருக்கும் அரசு அல்ல. நமது நலனில் அக்கறையுள்ள அரசு அல்ல. அந்தக் கொடி நமது கொடியுமல்ல. நாம் இந்த அரசுக்கோ இந்தக் கொடிக்கோ மதிப்புக் கொடுக்க வேண்டியதில்லை,

பர்மாவிலிருந்து டேவிட் என்ற நண்பர் ஒருவர் டில்லிக்கு வந்திருந்தார். அவர் நேருவையும் பார்த்தார்.

அவர் என்னிடமும் தங்கமணியிடமும் கண்ணீர் விட்டுக்கதறினார்.

அங்குள்ள தமிழர்கள் படும் நிலையை அவர் கூறியபோது எங்களுக்கு வேதனையாக இருந்தது.

அங்குள்ள அரசாங்கம் அந்தத் தமிழர்களை மிகவும் கேவலமாகவும், கொடுமையாகவும் நடத்தி வருகிறது அதைக் கேட்பதற்கு நமக்கென்று ஒரு அரசு இல்லை.

இரண்டு தலைமுறை மூன்று தலைமுறை வாழ்ந்த அந்த நாட்டை வளமாக்கியவர்களை வதை செய்கிறது.

அங்கு ஒரு முறை வைத்திருக்கிறார்களாம். 50 ரூபாய் கொடுத்து ஒரு வருடம் அனுமதி பெற வேண்டுமாம், காலம் முடிந்து ஒரு நாளானாலும் மீண்டும் 50 ரூபாய் கொடுத்துப் புதுப்பிக்க வேண்டுமாம் அப்படித் தவறினால் தமிழர்கள் வீடுகளை ராணுவம் சுற்றி வளைத்து அனுமதி கேட்டு துன்புறுத்தி சிறைக்கனுப்புகிறதாம்.

வழக்குப் போட்டு விசாரிப்பது கூட கிடையாதாம். இதனால் அங்குள்ள தமிழர்கள் பெருந்துன்பத்திற்கு ஆளாகி உள்ளார்களாம்.

இதைக் கேட்க நாதி கிடையாதாம்,

இதைப்பற்றி டில்லி அரசு என்ன நடவடிக்கை எடுத்தது.

அப்படி துன்புறுத்திய பர்மா சர்க்காருக்குத் தான் நேரு சர்க்கார் கடன் கொடுத்தது,

ஏன் பர்மா அரசுக்கு ஆட்சேபனை தெரிவிக்கவில்லை! தமிழனுக்கென்று ஒரு அரசு இருந்திருந்தால் சும்மா இருந்திருக்குமா?

இதே போன்று தான் இலங்கையிலும். மலேயாவிலும் தமிழர்கள் அவதிக்குள்ளாயிருக்கிறார்கள்! அவர்களைப் பற்றி நேரு அரசாங்கமோ. அந்த நாடுகளிலுள்ள நேரு அரசாங்க தூதர்களோ என்ன செய்தார்கள்.

பாக்கிஸ்தானிலுள்ள வடநாட்டவர்களுக்கு ஏதாவது தீங்கென்றால் துள்ளிக் குதிக்கும் டில்லி இதைப் பற்றி ஏன் கவலைப்படவில்லை!

டில்லியிலுள்ள அகதிகளுக்குக் காட்டும் அக்கரை கடல் கடந்த நாடுகளில் வாழும் தமிழர்களுக்காக ஏன் காட்டவில்லை,

ஆகவே தமிழர்கள் மீது தென்னகத்தார் மீது அக்கரையில்லாத இந்த நேரு அரசு நம்முடைய அரசு அல்ல, அதை நாம் பணிய வேண்டியதில்லை மதிக்க வேண்டியதில்லை இன்று வடநாட்டில் தண்டகாருண்யத்தில் அகதிகளுக்காக பல வசதிகள் செய்யப்பட்டு வருகிறது அந்த பாழான காட்டில ரயில் வசதிகள் செய்யப்பட்டு வருகிறது,

வடநாட்டு ஏகாதிபத்தியம் நம்மை நாயினும் கேவலமாக மதித்து வருகிறது. அதன் பிடியிலிருந்து விடுபட வேண்டும். வடநாட்டு அரசாங்கம் நம் அரசாங்கம் அல்ல என்பதை நாம் உணர்ந்து கொள்ள வேண்டும்.

ஆகவே நாம் இனி சுதந்தரமாக வாழ, விடுதலை பெற்று வாழவே பெரும் போர் வரப் போகிறது. அதில் நாம் பங்கு கொள்ளத் தயாராக வேண்டும் குமாரபாளையத்தில் நமது பொதுக் குழு தீர்மானிக்கும் முடிவுக்கு ஆதரவு தர தயாராக இருக்க வேண்டுமென்று கேட்டு விடை பெறுகிறேன்.

கழகம் போராட்ட உணர்ச்சியுடனே பிறந்தது—அது இன்னும் தன் போர் உடையை களையவில்லை!

(சம்பத் பேச்சு)

(8ம் பக்கத் தொடர்ச்சி)

காகச் சோதனை போட வேண்டியிருக்கையில் என் வண்டியைச் சோதனையிட்டார்கள். இது வேண்டுமென்றே பழி வாங்க இப்படிச் செய்கிருர்கள்

பதவியை வைத்து சுதந்திர உணர்ச்சியையும். விடுதலைஉணர்சியையும் அடக்குமுறையாலும் பழி வாங்கும் தன்மையாலும் அடக்க அதிகாரிகள் இறங்கிஞல் அது பல நாட்கள் நிலைத்திருக்க முடியாது

முதலமைச்சர் காமராசர் நம்மை அழிப்பதற்குப் பணக்காரர்களின் துணையை நாடிக் கொண்டிருக்கிருர்

தஞ்சையில் அவர் சுற்றுப்பிரயாணம் செய்யும் போது அவருடன்யார்இருந்தார்கள்வாண்டையாரும்; கபிஸ்தல முப்பனரும், வி. எஸ. தியாகராஜ முதலியாரும்,; நெடும்பலம் ராமலிங்கம் போன்ற பணக்காரர்களும் மிராசுதாரர்களும் சுற்றிக் கொண்டிருந்தார்கள்

மதுரைக்குச் சென்றால் டி. வி. எஸ். முதலாளியும் மற்றும் ஆலை முதலாளிகளும் சுற்றுகிருர்கள்

நாங்கள் சாதாரணமானவர்கள் தான் எங்கள் உணர்ச்சி சாதாரணமானதல்ல

நாங்கள் இந்த நாட்டின் விடுதலைக்காகச் செய்த பணிகள் நாங்கள் பட்ட இன்னல்கள் இவைகளைச் சாதாரணமாக மதிக்க முடியாது

எங்கள் தியாகப்பட்டியலை எங்கள் ஆற்றலை உன் கோட்டையில் தொங்கும் ஆதாரங்களை துருவிப்பார்த்தால் உனக்கு நன்கு விளங்கும்

இப்போது நம்முடை உணர்ச்சியை விடுதலைதாகத்தை சென்னையிலிருப்போர்களும், டில்லியிலுள்ளோரும் தப்புக் கணக்குப் போடுகிருர்கள் நமக்கு போராடும் குணம் மறைந்து விட்டது என்று எண்ணுகிருர்கள். அது தவறு என்பதை அவர்கள் அறியும்படி செய்யவேண்டும்

நம்மையும் நமது நாட்டையும் இழிவு படுத்தியதற்காக நேருவுக்குக் கருப்புக் கொடி காட்டினேம் அந்த செயல் பல நாள அவரும் வடவரும் மறக்கமுடியாத நிலையிலிருந்தது

நேரு நம்முடைய வீரத்தை நன்கு உணர்ந்திருந்தார். நம் எதிர்ப்பை நன்கு உணர்ந்திருந்தார்

பாராளுமன்றத்தில் இந்தி ஆட்சி மொழியாக்கும் விஷயம் வந்த போது நேரு பேசினர் அவர் பேசும் போது குறிப்பிட்டார் ஆட்சிமொழியாகஇந்தியை வைப்பதற்கு இந்தியைப் பெரும் பான்மையாகப் பேசும் மாநிலங்களின் அபிப்பிராயத்தை மட்டும் கேட்டுப் புகுத்த மாட்டோம் அந்த மாநிலங்களின் அபிப்பிராயத்தைவிட இந்தி பேசாத மாநிலங்களின் அபிப்பிராயத்தைக் கேட்டே முடிவு செய்வோம் என்று வாக்குறுதி தந்தார்.

இந்த வாக்குறுதி கொடுத்ததின் நோக்கமே நாம் அவருக்குக் காட்டிய எதிர்ப்பின் எதிரொலி தான். அந்த எதிர்ப்பு அவர் நெஞ்சிலே நிலை பெற்றிருந்தது.

மீண்டும் இது நடந்த மூன்று மாதத்திற்குப் பின் நடைபெற்ற பாராளுமன்றக் கூட்டத்தில் இந்தி விசாரணைக் குழுவின் அறிக்கை மீது நடந்த விவாதத்தின் போது பண்டித நேரு மீண்டும் அதே வாக்குறுதியைக் கொடுத்தார். "இந்தி விரும்பாத மாநிலத்தின் மீது பலவந்தமாகத் திணிக்க மாட்டோம் அவர்கள் அபிப்பிராயத்தை அறிந்தே முடிவு செய்வோம்" என்று கூறினர்.

இது இரண்டாவது முறையாக வாக்களிக்கப்பட்டது அப்பொழுது கூட நான் பாராளுமன்றத்தில் கேட்டேன் உள்நாட்டமைச்சர் பந்த் இது சம்மந்தமாக தமது அபிப்பிராயத்தைக் கூறவில்லையே அமைச்சர்களுக்குள் ஏதாவது அபிப்பிராய பேதமா? என்று கேட்டேன்.

"இதில் என் அபிப்பிராயம் தேவையில்லை. சொல்ல வேண்டியதை சொல்லியாகி விட்டது" என்று மழுப்பினர்.

கடைசியாகப் பாராளுமன்றம் முடியும் போது இந்தி விஷயமாக குடியரசுத் தலைவர் அபிப்பிராயம் அறிய வேண்டுமென்று உள்நாட்டமைச்சர் கூறியபோது நான் உடனே எழுந்து உள்நாட்டமைச்சரைக் கேட்டேன்.

இந்த சபையில் இரண்டு முறை இந்தி விஷயத்தில் கொடுத்த வாக்குறுதி என்னவாயிற்று? இந்தி பொதுமொழி என்று முடிவு செய்வதற்கும் இந்தி பேசாத மாநிலங்களின் அபிப்பிராயத்தை அறிந்தே செய்யப்படுமென்று பிரதம மந்திரி வாக்குறுதி தந்தாரே அது என்னவாயிற்று இப்போது ராஷ்டிரபதி அறிக்கை வரும் என்று கூறப்படுவதன் கருத்து என்ன? என்று கேட்டேன்.

இந்தி வெறியர்கள் கூச்சலிட ஆரம்பித்தார்கள்.

"பேசாதே" என்று சிலரும், "உட்கார்" என்று சிலரும், "வெளியே போ" என்று சிலரும் கூச்சலிட்டார்கள் என் பேச்சு கேட்க விடாது கத்தினர்கள். நானு அதற்கெல்லாம் பயப்படுபவன். அவர்கள் கூச்சலை விட மிக அதிகமாகக் கத்திப் பேசினேன். நாம் தான் சத்தம் போட்டுப் பழகியவர்களாயிற்றே, அவர்கள் கூச்சல் என் சத்தத்திற்கு முன் நிற்க முடியவில்லை. அவர்கள் எண்ணம் பலிக்கவில்லை.

ஆனாலும் வெறியர்கள் நான்கு முறை கத்தினர்கள். இது போது நேரு ஒன்றும் பதில் கூருது கன்னத்தில் கை வைத்துக் கொண்டிருந்தார்.

பந்த் மட்டும் "அதைப் பற்றி இப்போது என்ன" என்று பழுப்பினர்.

நான் விடவில்லை பிரதமர் இரண்டுமுறை கொடுத்தாரே அந்த வாக்குறுதி என்னவாயிற்று என்று மீண்டும் கேட்டேன்

அதற்கு பஞ்சசிலம் பேசி வருபவரும், உலகத்திற்கே நீதியைப் போதிப்பவருமான பண்டித நேரு மௌனமாக இருந்தார்,

அவருக்கு நேர்மையில் நீதியில் அக்கரை இருந்திருந்தால், ஆண்மையில் நம்பிக்கை இருந்திருந்தால் தான் கொடுத்த வாக்குறுதியை ஒப்புக் கொண்டிருக்கலாமே, வெறித் தன்மையில் கூச்சல் போட்டவர்களுக்குப் புத்தி புகட்டி இருக்கலாமே ஏன் செய்யவில்லை.

இதிலிருந்து தெரிகிறது. இவர்களெல்லாம் கூடிப் பேசியே இந்த சதி வேலைகளில் ஈடுபட்டிருக்கிருர்கள் என்று.

இன்று மக்கள் முன் இவர்கள் முகத்திரை கிழிந்து விட்டது. இவர்கள் வேண்டு மென்றே—முன் கூட்டியே நம்மைப் பழி

[12ம் பக்கம் பார்க்க)

கடல் பொங்கி எழுந்தது! யார் என்ன செய்ய முடியும்?

"தமிழ் நாட்டில் சுற்றுப் பிரயாணம் செய்து வரும் வடநாட்டு சோஷலிஸ்டுத் தலைவர் கோவையில் கல்லடிப் பட்டார், கரூரில் சொல்லடிப் பட்டார்" என்ற செய்தியை உண்மையிலேயே வருந்தத்தக்கச் செய்தி தான்! என்ருலும் அக்கினி மலையை அணைக்க முடியுமா?

கோவைக் கூட்டத்தில் வடநாட்டு ராம் மனேகர் லோகியா இந்தியில் பேசினர்! தமிழ் நாட்டு மக்கள் தமிழில் பேசும்படி கேட்டார்கள்! இதில் என்ன தவறு? இதற்காக ராம் மனேகர் லோகியா மக்கள் மீது சோடா புட்டிகளையா வீசுவது? எப்படி வந்தது அந்த தைரியம்? நாங்களென்ன சோற்ருல் அடித்த பிண்டங்களா? உணர்ச்சியற்ற மரக்கட்டைகளா?

தமிழ் நாட்டு ஆச்சாரியார் வடநாட்டில் சுற்றுப் பிரயாணம் செய்த போது நீங்கள் "இந்தியில் தான் பேச வேண்டும்" என்று கேட்கவில்லையா? இது மட்டும் எந்த நியாயத்தைச் சேர்ந்தது!

உங்களுக்கு வெறி இருக்கலாம்! எங்களுக்கு எங்கள் மொழி மீது பற்று இருக்கக் கூடாதா?

தமிழகத்து மக்கள் கொதித்திருக்கிருர்கள், வேங்கையைப் போல் வெகுண்டு நிற்கிருர்கள்! தயவு செய்து யாரும் அவர்களை சோதிக்காதீர்கள்!

இந்தி எப்படி ராம் மனேகர் லோகியாவுக்கு சொந்த மொழியோ, அப்படித் தான் எங்களுக்கு தமிழ் மொழி சொந்த மொழியாகும்! எங்கள் நாட்டில் தமிழில் தான் பேச வேண்டும்! இல்லை என்ருல் கோவை தான் நடைபெறும், கரூர் தான் நிகழும்!

நண்பர்களே! கடல் பொங்கி எழுந்து விட்டது! யார் என்ன செய்ய முடியும்? எப்படித் தான் அதைத் தடுக்க முடியும்!

அநாகரிக முறையைக் கையாண்டு, காட்டு மிராண்டித் தனமான செயலில் ஈடுபட்டு மக்களை வெகுண்டெழ வைத்த லோகியாவும், மற்றவர்களும் இதை உணர வேண்டும்!

Regd. No.M. 7074 MALAIMANI விலை 16 காசு Phone 83285
இலங்கையில் சதம் 2

எங்களிடையே போட்டி என்பது இரட்டைப் பேனுக்காரர் விடும் சரடு!

(சம்பத் பேச்சு)

(11-ம் பக்கத் தொடர்ச்சி)

வாங்க நினைத்து விட்டார்கள் என்பதை மக்கள் உணர்ந்து விட்டார்கள்.

பாராளுமன்றம் முடிந்த ஒரு வாரத்திற்குப் பின் குடியரசு தலைவரின் தாக்கீது வந்து விட்டது.

அவர்கள் பலவந்தமாக நம் மீது தங்கள் மொழியைத் திணிக்கத் திட்டமிட்டு விட்டார்கள்.

பதுங்கி யிருந்தவர்கள்—பயந்தவர்கள் இன்று திடிரென்று இப்படித் துணிந்ததற்குக் காரணம் என்ன?

நாம் பெருந்தன்மையோடும், சகிப்புத்தன்மையோடும் இருந்து வந்ததைத் தப்புக் கணக்குப் போட்டு விட்டார்கள். நாம் எதிர்க்க மாட்டோம், ஏற்றுக் கொள்வோம் என்று எண்ணி விட்டார்கள்!

இனி நாம் செயலில் இறங்குபவர்கள், நமக்கும் விடுதலை உணர்ச்சியுண்டு. நாம் போராடும் தன்மை வாய்ந்தவர்கள் என்று காட்டி விடவேண்டும்.

நியாயம், பெருந் தன்மை, நேர்மை, கண்ணியம் என்று பார்த்துக் கொண்டிருந்தால் அவர்கள் நம்மை கோழைகள், பயங்கொள்ளிகள், வீர மற்றவர்கள் என்று நினைத்து விடுகிறார்கள்.

நாம் இந்தியை திடீரென்று இன்று எதிர்க்கவில்லை. அதை நாம் ஆரம்பத்திலிருந்தே எதிர்த்து வருகிறோம் "இந்தி ஒழிக! இந்தி ஒழிக!" என்று நமது ஊர்வலங்களிலும் மாநாடுகளிலும், பொதுக் கூட்டங்களிலும் முழக்கமிட்டு வருகிறோம். நாம் பல திட்டங்களையும் இலட்சியங்களையும் கூறி வந்தாலும் இந்தியை நமது முதல் லட்சியமாக வைத்தே எதிர்த்து வருகிறோம்.

நம்முடைய கூட்டங்களிலும், மாநாடுகளிலும் அண்ணன் பொன்னம்பலனார் தமது பேச்சை முடிக்கும் போது "இந்தி ஒழிக! இந்தி ஒழிக!" என்று முழக்கமிட்டு கூட்டத்திலுள்ளோரையும் கூறும்படி செய்கிறார்.

இன்று டில்லி ஏகாதிபத்தியம் நமக்குச் சவால் விட்டு விட்டது. அந்த சவாலை ஏற்றுக் கொள்கிறோம். நாங்கள் திறமையற்றவர்களல்ல என்பதை எடுத்துக் காட்டியே விடவேண்டும்.

சென்னையிலுள்ள அமைச்சர்கள் நம்மை மீசாளக காட்டு பொம்மைகள் என்று நினைத்துக் கொண்டிருக்கிறார்கள்.

சுதந்திரக் கட்சித் தலைவர் ஆச்சாரியார் காசிக்குச் சென்றார் அங்கு ஆச்சாரியார் ஆங்கிலத்தில் பேசினால் இந்தியில் பேச வேண்டுமென்று கூச்சல் போட்டார்கள். அவர் "எனக்கு இந்தி தெரியாது" என்று கூறியும் அவரைப் பேச விடவில்லை. இந்தி தெரியா விட்டால் இங்கு பேச வேண்டாம் இங்கு வேலை இல்லை போய் விடு" என்று கத்தினார்கள்.

காசியிலுள்ளவர்களுக்கு எவ்வளவு வெறித் தன்மை வளர்ந்திருக்கிறது அந்த வெறி நமக்கு வராது என்று வடவர் எண்ணுகிறார்கள்.

நமக்கும், ஆச்சாரியாருக்கும் கொள்கையில் வேறுபாடுகள் இருக்கிறது. இருந்தாலும் நம் நாட்டிலுள்ள ஒருவரை பொறுப்பற்ற முறையில வெறி பிடித்த முறையில் காலித்தனம் செய்ததைத் தான் இங்கு கூறுகிறேன்.

நம்முடைய நாட்டிற்கு வடநாட்டிலிருந்து திறந்த வீட்டில் நாய்கள் நுழைவது போல் இங்கு நுழைகிறார்கள். அவர்களுக்கு வழி காட்ட நமது அமைச்சர்கள் இருக்கிறார்கள்.

வட நாட்டார இங்கு வந்து நாவடக்கமின்றி நம்மை இழிவுபடுத்தும் வகையில் பேசுகிறார்கள்.

சமீபத்தில் வடநாட்டிலிருந்து சோஷலிஸ்ட்டுக் கட்சித் தலைவர் டாக்டர் ராம்மனோகர் லோகியா கரூரில் ஒரு பொதுக் கூட்டத்தில பேசினார். அவர் இந்தியில் பேசினார்! அதை நமது தோழர்கள் எதிர்த்தார்கள், இந்தியில் பேசாதே தமிழில் பேசு என்று முழக்கமிட்டார்கள். அப்படி முழக்கமிட்ட இருபத்தைந்து தோழர்களை கைது செய்திருக்கிறார்கள. நான் இதை கேள்வியுற்றதும் மகிழ்ந்தேன், பெருமைப்பட்டேன.

இன்றைக்காவது இந்த உணர்ச்சி நமக்கு ஏற்பட்டிருக்கிறதே என்பதை யறிந்து பூரிப்படைந்தேன்.

இப்படி முன்பு நடந்திருந்தால் இது கண்ணியமற்ற செயல் நாகரீகமற்றநடவடிக்கை காலித்தனமான செய்கை என்று கூறியிருப்போம். ஆனால் இன்று அந்த உணர்ச்சி, அந்த எண்ணம் வந்ததற்கு மகிழ்கிறோம். காரணம் இந்தி வெறியர்கள் செய்து வரும் ஏதேச்சாதிகார நடவடிக்கையால தான்.

இந்த மாநிலத்தில இந்திப் பிரச்சார சபாக்கள் என்ற பேரால் இங்கு இந்தியைப் பரப்பிக் கொண்டிருக்கிறது. வடநாட்டிலிருந்து பல மேதைகள் என்று கூறிக் கொண்டு அந்த சபைக்கு அழைத்து வந்து இந்தியில பேசுகிறார்கள்.

இந்தி வெறியர்கள் தங்கள் மொழியை அரசாட்சி அதை பார்க்க நினைக்கிறார்கள். நாம் நமது தமிழ் மொழியை சிம்மாசனத்தில் ஏற்றி முடி சூட்டி மகிழ வேண்டும் என்று நினைக்க வேண்டும்.

இன்று வடநாட்டு இந்தி ஏகாதிபத்திய வெறியர்கள் எந்த முகத்தை வைத்து இங்கு வருகிறார்கள்,

நமக்கு மொழி வெறியோ, விடுதலை உணர்ச்சியோ இல்லையென்று நினைத்தே வருகிறார்கள், அவர்களை அப்படி வரவிடலாமா?

நமது அமைச்சர்கள் இன்னும் மழுப்பியே பேசி வருகிறார்கள். இந்தியைப் பற்றிய தங்களது முடிவான எண்ணத்தை—கருத்தை மக்களிடம் கூறுதிருக்கிறார்கள். குள்ள நரிகள் போல் வேஷமிட்டு மக்களை ஏய்க்க நினைக்கிறார்கள்.

இன்று இந்தி எல்லா இடங்களிலும் திணிக்கப்பட்டு விட்டது, ரயில்வேக்களிலும், தபால் நிலையங்களிலும் பள்ளிகளிலும் இந்தி கட்டாயமாகப் புகுத்துகிறார்கள்.

பள்ளிகளில் மாணவர்கள் இந்தியைப் படித்தால் தான் தேர்வுகளில் தேற முடியும். இந்தியில் மார்க்கு வாங்கினால் தான் வகுப்புகளில் மாற்றுவார்கள் இந்த நிலை இன்று இங்கு உருவாகி விட்டது. மாணவர்களின் பெற்றோர்களும், தலைமையாசிரியர்களும் இதைக் கண்டு வருந்துகிறார்கள், இன்று தமிழ் நாட்டு மாணவர்கள் மிகவும் அவல நிலைக்கு வந்து விட்டது.

இதைப் பார்த்துக் கொண்டு நாம் கைகட்டிக் கொண்டிருக்கலாமா?

இந்தி படித்தால் தான் சர்க்கார் அலுவலகங்களில் பணி கிடைக்கும, உத்தியோக உயர்வு கிடைக்கும், சம்பள உயர்வு கிடைக்கும் என்று அரசினர் தாக்கீது வந்துவிட்டது அரசாங்க அலுவலகங்களில் பணியாற்றுகிறவர்களெல்லாம் மிகவும் சங்கடப்படுகிறார்கள். நாம் வாயளவில் தான் இந்தியை எதிர்க்கிறோம், செய்கையில் ஒன்றும் செய்ய மாட்டோம் என்று எண்ணுகிறார்கள். நாம் போராடும் சகதியைப் பெறவில்லை யென்று நினைக்கிறார்கள்.

ஆகவே நாம் இப்போது இந்தியை எதிர்த்துப் போராடவில்லை யென்றால் பின் சந்ததியர்கள் நம்மை துரோகிகள் என்று நினைப்பார்கள.

நமது நிதியமைச்சர் சுப்பிரமணியம் இந்தியை எதிர்ப்பவர் போல் பாவனை செய்தார். இந்தி கட்டாயமாகாது என்றார், தமிழ் தான் ஆட்சி மொழி யென்றார. எல்லாம வாயளவில் தான் பேசினார்.

இந்த மாநில அமைச்சர்களும் வடநாட்டு ஆட்சியாளர்களும் சேர்ந்து சதி செய்தே இந்தியை கொண்டு வந்திருக்கிறார்கள்.

நாட்டை அன்னியருக்குக் காட்டிக் கொடுக்கும் துரோகிகளாக இன்று வந்து விட்டார்கள். நள்ளிரவில் திருடர்களுக்குக் கதவைத் திறந்து விடும் வஞ்சகர்களாகி விட்டார்கள்.

ஆகவே இதற்கு ஒரு முடிவு காண வேண்டும்.

நம்முடைய தைரியத்தை, பலத்தை வீரத்தை சக்தியை சந்தேகப்படுகிறார்கள்,

இனிமேல் இவர்களிடம் நாகரீகமாகவும் நீதியாகவும், நேர்மையாகவும் கேட்டால் முடியாது அப்படிக் கேட்பதைப் பார்த்தே அவர்கள் நம்மை வீரமில்லாதவர்கள் என்று நினைக்கிறார்கள்.

நாம் உண்மையாகவே தியாகிகள் வீரமிக்கவர்கள்—விடுதலை உணர்ச்சி கொண்டவர்கள் என்பதைக் காட்டியே தீரவேண்டும்,

இன்று நம்முடைய தோழர்கள் அனைவரும் பெரும் விடுதலைப் போர் ஒன்று நடத்தியே ஆக வேண்டுமென்ற முடிவுக்கு வந்து விட்டார்கள். நம்முடைய தோழர்கள் பேச்சுக்களெல்லாம் இன்று போராட்டம் வேண்டுமென்றே பேசி வருகிறார்கள்,

சேலம் மாவட்டத்திலுள்ள குமார பாளையத்தில் நமது பொதுக்குழு நடைபெறப் போகிறது. அங்கு போராட்டம் எப்படி நடத்துவது போராட்டம் எப்படி இருக்கும் என்ற விதி முறைகளை வகுக்கவே கூடுகிறது.

திராவிட முன்னேற்றக் கழகத்தின் தலைமையில் மகத்தான விடுதலைப் போராட்டம் ஆரம்பமாவது நிச்சயம்.

பல தோழர்கள் மனதில் போராட்ட எண்ணங்கள் உதித்துக் கொண்டிருந்தது. அண்ணா அவர்கள் என்ன கூறுவார்களோ என்று நினைத்து வந்தார்கள். அவருடைய எண்ணம் எப்படியிருக்குமோ என்று நினைத்து வந்தார்கள், அண்ணா அவர்களோ மற்ற தோழர்கள் போராட்டத்தைப் பற்றி என்ன நினைப்பார்களோ என்று எண்ணியிருந்தார். ஆனால் இன்று எல்லோரும் போராட்டம் தேவை என்பதை மிகவும் கடுமையாக வற்புறுத்தி வருகிறார்கள்.

அண்ணா அவர்கள் மடியும் வரை, உயிரை விடும்வரை, போராட்டம் வேண்டுமென்று கூறிவிட்டார். நாங்கள் அவரை கட்டிபிடிக்க வேண்டிய நிலை ஏற்பட்டு விடுமோ என்று நினைக்கிறோம்.

(7-ம் பக்கம் பார்க்க)

ஆசிரியரும், வெளியிடுவரும், அச்சிடுபவரும் பி.எஸ். இளங்கோ கல்விப் பிரகாசம் பிரஸ்,:
404 திருவல்லிக்கேணி ஹைரோடு, சென்னை-5 அலுவலகம்: 1-35, வாணியர் தெரு. சென்னை-14.